Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு +II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)

021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 19 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 21 (04.12.2004) சனிக்கிழமை இதழ்:64

## விசேட காலாற்படையின் 10 ஆவது அணி வெளியேற்றம்!



விசேட காலாற்படைப் பயிற்சியயை முடித்த பத்தாவது இராணுவ அணியின் அணி வகுப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை பலாலி விமானநிலைய மைதானத்தில் யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பத்தாவது அணியில் 5 அதிகாரிகளும், 89 படையினரும் பயிற்சியை முடித்தனர். இவர்களுக்கான சான்றிதழ்களை மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் வழங்கினார்.

## பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர அனுமதிக்க முடியாது!

### உயர்நீதிமன்றத்துக்கு சட்ட மா அதிபர் பதில்

(கொழும்பு)

பலாலி விமானநிலையம் மற்றும் அதனைச் சூழவுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள், பொதுமக்களை மீளக் குடியமர அனுமதிக்க முடியாதென சட்ட மா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் வலி.வடக்குப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயத்தால் இடம்பெயர்ந்துள்ள விவசாயிகள் சிலர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமைமீறல் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, பிரதிவாதிகள் தரப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த விசாரணையின் போது பிரதிவாதிகளில் ஒருவரான இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்குப் பதிலாக சிரேஷ்ட அரசாங்க சட்டத்தரணி உதித்த இகலேவ கருத்துத் தெரிவிக்கையில் -

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் பொதுமக்களைக் குடியேற்றுவதன் மூலம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் குறிப்பிட்டார். இந்த மனு மீதான மேலதிக விசாரணைகள் அடுத்த வருடம் ஜனவரி 31 ஆம் திகதி நடைபெறுமென உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# புலிகளின் யோசனைப்படி மட்டும் பேச்சுக்களை நடத்த முடியாதாம்!

## நாடாளுமன்றத்தில் லக்ஷ்மன் கதிர்காமர் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தாம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரவரைபின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வருமாறு வலியுறுத்தினாலும் - அதன்படி மட்டும் பேச்சுக்களை நடத்தமுடியாது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் சகல விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத்தவே ஜனாதிபதி சந்திரிகா தயாராகவிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெளிவிவகார அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டு விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய லக்ஷ்மன் கதிர்காமர் -

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக பூரணமாகக் கலந்துரையாடுவதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கிறது. ஆனால் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற நிபந்தனை காரணமாகவே பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் குழப்புவதற்கு முயற்சிசெய்யவேண்டிய தேவை எவருக்கும் கிடையாது. இந்த உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு அபிப்பிராயங்களை முன்வைத்தாலும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு அரசியல் அர்ப்பணிப்பும் துணிவும் அவசியம். சமாதானத்தை ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.



## பலாலி நோக்கி வரவிருந்த விமானத்தில் குண்டுப் புரளி!

(கொழும்பு)

இரத்மலானையில் இருந்து நேற்றுக்காலை பலாலிக்கு வரவிருந்த உள்ளூர் விமானத்தில் குண்டு இருப்பதாக அநாமதேய தொலைபேசி எச்சரிக்கை கிடைத்ததை அடுத்து - மேற்படி விமானசேவை இரண்டு மணிநேரம் தாமதமடைந்தது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் 45 பயணிகளுடன் புறப்படத் தயாராக இருந்த போதே இந்த குண்டுப்புரளி பற்றிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து விமானப்படையினரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது? அறிவிக்கக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு!

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டிய திகதி குறித்து தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக் கோரும் மனுவொன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

களனியைச் சேர்ந்த சட்டத்தரணியான ஜி.தர்மதாஸ கோமில என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் -

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டிய திகதி தொடர்பாக சிக்கல்கள் எழுந்துள்ளன.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று இரண்டாவது பதவிக் காலத்துக்காக பதவியேற்றார்.

1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி மற்றும் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி ஆகிய இரண்டு நாட்கள் - ஜனாதிபதியாக சந்திரிகா பதவிப்பிரமாணம் செய்துள்ளதால் -

ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் எப்போது முடிவடைகின்றது என்பது குறித்தும் எப்போது அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்பது குறித்தும் முரண்பாடுகள் நிலவுகிறது.

இந்தச் சிக்கல்நிலைக்குத் தீர்வுகாணும் வகையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிக்குமாறு மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 2006 ஆம் ஆண்டுதான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போலிச் சாமியார் கொழும்பில் கைது!

(கொழும்பு)

சாமியார் வேடமிட்டு பெண்களை இம்சைப்படுத்தி வந்த அயல்நாட்டைச் சேர்ந்த போலிச் சாமியார் ஒருவரை கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

பூஜைகள் நடத்தி பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதாக ஏமாற்றியே இவர் பெண்களை இம்சைப்படுத்தி வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த போலிச் சாமியார் குறித்த தகவல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்றுமாலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - திருமலை வீதியில் நேற்றுமாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த யோன்பிள்ளை சந்திரமோகன் (வயது-33) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் குறித்த நபர் தனது வீட்டில் குளித்துக்கொண்டிருந்த சமயம் இருவர், இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டு தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. சூடுபட்டவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தற்போது இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மட்டக்களப்பு நகரப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கொல்லப்பட்ட நபர் பொலிஸ கொன்ஸ்டபிளாக இருந்து விலகியவர் எனவும் மற்றொரு தகவல் தெரிவித்தது.

## தேசிய அடையாள அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பு

க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாகவும், அடையாள அட்டை கிடைக்காத மாணவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங் கள் மூலம் தொடர்பு கொள்ளலா மெனவும் ஆட்பதிவுத் திணைக் களம் தெரிவித்துள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களாவன - உதவி ஆணையாளர் நியாஸ் 0112 593637, 0112 593638 உதவி ஆணையாளர் கருணாரத்ன 0112 593636, உதவி ஆணையாளர் எம். கருணாதிலகபெரேரா 0112 593639 என்பனவாகும். மாணவர்களின் நலன் கருதி டிசம்பர் 4,5,11,12ஆம் திகதிகளில் அடையாள அட்டை திணைக்களம் இயங்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

## அஞ்சலக உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை

அஞ்சல் திணைக்களங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்கள், உபஅஞ்சல் அதிபர்களை அஞ்ச லக உத்தியோகத்தர்களாக தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெற வுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் இருந்து பரீட் சைக்கு தோற்றவுள்ளோருக்கு இம் முறையும் யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாட்டினை அஞ்சல் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

பரீட்சைக்கான அனுமதிக் கடி தங்கள், நேரஅட்டவணைகள் விரை வில் விண்ணப்பதாரிகளுக்கு அனுப பிவைக்கப்படும் என்றும் தெரிவிக் கப்படுகிறது.

## நாவலரின் சிலை திறப்பு விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசா லையில் அமைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலை இன்று மு.ப. 11.00 மணிக்கு கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலை மையில் நடைபெறும் நிகழ்வில் கலாநிதி அருட்கவி சீ.விநாசித் தம்பி நாவலரின் உருவச் சிலை யைத் திறந்துவைப்பார். நாவலர் குருபூசையும் இந்து மாமன்றத் தினரால் நடத்தப்படும்.

## தலைமைத்துவப் பயிற்சியும் கருத்தரங்கும்

கியூடெக் நிறுவனத்தால் அல் லைப்பிட்டியில் தலைமைத்துவப் பயிற்சியும் கருத்தரங்கும் இன்று காலை 10 மணிக்கு ஊக்குவிப் பாளர் ஜோன்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இளைஞர் குழு உருவாக்கமும் திட்டமிடலும், இளைஞர்விழிப்பூட் டல் படக்காட்சியும் இடம் பெறவுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. (91)

## ஒளிவிழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி யாலயத்தில் இன்று மு.ப. 11.30 மணிக்கு ஒளிவிழா நிகழ்ச்சிகள் வித்தியாலய உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை வித்தியாலய பெயர்வளைவு திரைநீக்கம், முறை சாராக்கல்விக் கண்காட்சி என்பன வும் இடம்பெறுவுள்ளன.

வித்தியாலய அதிபர் ச.சத்திய வரதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தி னராக தீவக கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதா கிருஷ்ணன் கலந்துகொள்ளவுள் ளார். (113)

## சாவகச்சேரியில் திருடப்பட்ட தொலைபேசிகள் மீட்பு!



சாவகச்சேரியில் அமைந்துள்ள மைக்றோ செலுலர் விற்பனை நிலையம் அண்மையில் உடைக்கப்பட்டு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய தொலைபேசிகள் மற்றும் மின் உபகரணங்கள் திருடப்பட்டன.

இவ்வாறு திருடப்பட்ட இந்தப் பொருட்களை யாழ் நகரில் மலிவு விலையில் இருவர் விற்பனை செய்துகொண்டிருந்தவேளை பொலிஸார் இவர்களைக் கைதுசெய்தனர். இவர்களிடமிருந்து 12 கையடக்கத் தொலைபேசிகள், 6 சாச்சர்கள், கையடக்கத் தொலைபேசி பற்றறிகள் மற்றும் மேசைத் தொலைபேசிகள் உட்பட மீட்கப்பட்ட பொருட்களுடன் பொலிஸார் நிற்பதைக் காணலாம்.

## ஆசிரியர் சுதர்சன் நினைவு 1ம் ஆண்டு அஞ்சலிக்கூட்டம்

(நெடுந்தீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியர் தம்பிராசா சுதர்சனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 3.30 மணி யளவில் நெடுந்தீவு மேற்கு ஐக்கிய தீப சனசமூகநிலைய மண்டபத் தில் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவு கோட்டப் பாடசாலை மாணவர்கள், புங்குடுதீவு பிரதேச பாடசாலை மாணவர்கள் ஆகியோ ரிடையே ஆசிரியர் நினைவாக நடாத்தப்பட்ட பொதுஅறிவுப் போட் டியில் வெற்றியீட்டிய மாணவர்க ளுக்கான பரிசில்களும் கரப்பந் தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய கழகங்களுக்கான பரிசில்கள் வழங்கலும் மற்றும் நினைவுரைகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன.

நினைவுநாள் நிகழ்வுகள் ஐக் கியதீபம் அமைப்பின் ஏற்பாட்டுக் குழுவினரால் நடாத்தப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது. (113)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட் டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.வல யத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர் கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல் விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

## சங்கீதசபை பரீட்சைக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீத சபை அடுத்த ஆண்டில் நடாத்தவுள்ள தேர்வுகளுக்கான விண்ணப்ப முடி வுத்திகதி இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

திருமுறைப்பண்ணிசை, வாய்ப் பாட்டு, வயலின், வீணை, புல்லாங் குழல், மிருதங்கம், பரதம், கதகளி ஆகிய பாடங்களுடன் இவ்வாண்டு புதிதாக தவில், நாதஸ்வரம், ஹார் மோனியம் ஆகிய பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட விண்ணப்பதாரி கள் தங்கள் விண்ணப்பப் படிவங் களை யாழ்.வலயக்கல்வி அலு லகத்தில் அமைந்துள்ள வடஇலங்கை சங்கீதசபைப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிமாவட்ட விண்ணப்பதாரி கள் தமக்கு வேண்டிய விண்ணப் பப் படிவங்களை அவ்வப்பகுதி இணைப்பாளரிடம் பெற்று விண் ணப்பிக்க முடியும் என்று வட இலங்கை சங்கீதசபைத் தலைவர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.


நிறைஞ்சனாஸ் சாங்கானை
விஜயகாந், சமீதாரெட்டி நடித்த
இராஜ்ஜியம் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
VANHELSING (றகுல படம்) (சி-2723)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
அஜித், சிநேகா நடித்த (குளிரூட்டப்பட்டது)
ஜனா (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30. 6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 (பு.நே)
RAMBO - 3 தாக்குதல் நிறைந்த படம் (சி-3319)

யாழ்ப்பாணம்.
5ம் திகதி வரை
அஜித், பூஜா நடித்த
அட்டகாசம்
காட்சி நேரம்: 10.30.2.30. 6.30 மட்டும்
6ம் திகதி முதல்
போஸ் (ரீல்ஸ்) (சி-3319)

சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
P.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல்
நடித்த
சத்ரபதி
கா.நே. 11.00, 2.00, 7.00,





## திறந்த பல்கலைக்கழகம் யாழ். பிராந்திய நிலையத்திற்கு

வாருங்கள் - அறியுங்கள் - தீர்மானியுங்கள்

✷ எந்திரவியல் ✷ டிப்ளோமா ✷ பட்டமானி ✷ பட்டப்பின் படிப்பு படிக்க விரும்பும்

மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 05.12.2004 காலை 10.00 மணிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு கொழும்பு திறந்த பல்கலைகழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பேரா சிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்களுடன் கலந்துரையாட அனைத்து பாடசாலை O/L, A/L மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விண்ணப்பப் படிவம் 250/- செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்



இடம் :- பிறவுண் றோட், கொக்குவில். தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில்

எந்திரி. ச.ஆ.ஞானேந்திரன்
யாழ். பிராந்திய இயக்குநர்.

C/3433



## பால், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம்.

*(Sexual Gender Based Violence Working Group Jaffna)*

(நடாத்தும்)

### இளம் படைப்பாளிகளுக்கான திறன் வெளிக்கொணர் போட்டிகள்

**போட்டிகள்**

1. சுவரொட்டி வரைதல்
2. கட்டுரை ஆக்கம்

பங்குபற்றுவோர் வயதெல்லை 13 முதல் 19 வரை

தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று படைப்பாளிகளுக்கு உயரிய பெறுமதிமிக்க பரிசுகளும், தெரிவுசெய்யப்படும் சிறந்த 10 படைப்பாளிகளுக்கு ஆறுதல் பரிசில்களும், பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
(தெரிவுக் குழுவினரின் தீர்ப்பே இறுதியானது)

ஆக்கங்களுக்கான நிபந்தனைகள் :

- ஆக்கங்கள் அனைத்தும் சொந்தமானதாக இருத்தல் வேண்டும்.
- மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்பட்டவரென *பாடசாலை அதிபரினால் அல்லது படைப்பாளியின் எல்லைக்குட்பட்ட கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.*

**சுவரொட்டி வரைதல்**

12'' X 15'' அளவு.
விடயம் : பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்.
(திறந்த தலைப்பு)

**கட்டுரை ஆக்கம்**

ஆக்கம் : 300 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
தலைப்புகள் :
1. வன்முறைகளற்ற சமுதாயத்தில் பெண்கள்...
2. நாளைய பெண்கள் சுயமாக வாழ...
3. தொழில் நிலையில் யாழ்ப்பாணப் பெண்கள்...
4. கலாசார விழுமியங்களின் பிடியில் பெண்கள்...
5. கிராமிய மட்டத்தில் பெண்களின் நிலை...

ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய கடைசி திகதி : 10 டிசெம்பர் 2004
அனுப்பவேண்டிய முகவரி : யு.என்.எச்.சி.ஆர்
223, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

ஆக்கங்களை சமர்ப்பிப்போர் தமது பெயரையும் முகவரியையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். ஆக்கங்கள் தபால் மூலமாகவோ நேரிலோ சமர்ப்பிக்கலாம். சமர்ப்பிக்கப்படும் தபால் உறையின் இடது மூலையில் ''இளம் படைப்பாளிகளுக்கான திறன் வெளிக்கொணர்தல்'' எனக் குறிப்பிடவும். (C/3432)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம்



## மேஜர் முரளி முன்பள்ளி

பரவிப்பாஞ்சான் - கிளிநொச்சி

1. மேற்படி முகவரியில் அமைந்துள்ள முன்பள்ளியின் 2005ம் ஆண்டுக்கான மாணவர்களை இணைப் பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. வயது 31.12.2004 இல் அல்லது அதற்கு முதல் 03 வயதினைப்பூர்த்தி செய்தவர்களும் 04, 05 வயதிற் குட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
3. விண்ணப்பங்கள் 15.12.2004 வரை ஏற்றுக்கொள் ளப்படும்.
4. மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
5. விண்ணப்பப் படிவங்களும் மேலதிக விபரங்களும் கீழ்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

நடுவப்பணியகம்,
தமிழீழ மாணவர் அமைப்பு,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(C/2891)

# பண்டா குடும்ப ஆட்சிக்காலத்தில் தமிழருக்கு பாதிப்பு இல்லையாம்

## அனுரா பண்டாரநாயக்க நாடாளுமன்றில் தெரிவிப்பு



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள்- தமது குடும்பத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பதாகச் சுற்றுலாத் துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது, உரை நிகழ்த்திய அனுரா பண்டாரநாயக்க -

தந்தையார் பண்டாரநாயக்கவின் காலத்தில் உருவாக்கப்பட்ட இனப்பிரச்சினை, தாயார் காலத்தில் விஸ்வரூபமெடுத்து சகோதரியால் கூடத் தீர்க்கப்படமுடியாது போய்விட்டதென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கூறினார்.

உலகம் போற்றும் பண்டாரநாயக்க குடும்பத்தை விமர்சித்து அபகீர்த்தியை ஏற்படுத்த ரவிராஜுக்கு எந்த உரிமையும் கிடையாது.

பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எனது சகோதரி சந்திரிகா முற்பட்டபோதே அவரது கண் பாதிக்கப்பட்டது.

எமது குடும்பத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும்வகையில் ரவிராஜ் ஆற்றிய உரையில் காணப்படும் வாசகங்கள், ஹன்சாட்டில் இருந்து நீக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் கருத்து வெளியிட்ட சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தற்போதைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் உரை நாடாளுமன்ற பதிவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்படாது எனத் தெரிவித்த அதேநேரம், குறிப்பிட்ட உரையை ஆராய்ந்த பின்னர் இறுதித் தீர்ப்பை அறிவிப்பதாகக் கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஏற்கனவே அனுரா பண்டாரநாயக்க பல தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் உரையாற்றியதை மறந்துவிட்டாரா? என்று கேள்வி எழுப்பியதுடன் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட பண்டாரநாயக்க குடும்பத்தைக் கடுமையாக விமர்சனம் செய்தார்.

அப்போது ஆளும் கட்சி - எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே கூச்சல்கள் எழுந்தன.

இதேவேளை - நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் எழுப்பும் எந்தவொரு கேள்விக்கும் இனிமேல்தான் பதிலளிக்கப் போவதில்லை என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கான தீர்மானத்தைத்தான் எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க குடும்பத்தினர் மீது மகேஸ்வரன் பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருகின்றார். இதனைத் தொடர்ந்து நாம் சகித்துக்கொண்டிருக்கமுடியாது எனக்கூறி, பண்டாரநாயக்க குடும்பம் தொடர்பாக மகேஸ்வரன் தெரிவித்த கருத்துக்களை ஹன்சாட்டிலிருந்து நீக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் அதற்கான உத்தரவை விடுத்தார்.

# சிறைக் கைதிகளைப் பரிமாற்ற பாகிஸ்தானுடன் ஒப்பந்தம்!

(கொழும்பு)

இலங்கை மற்றும் பாகிஸ்தான் சிறைகளில் குற்றச் செயல்களின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளைப் பரிமாற்றம் செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கை அரசும், பாகிஸ்தான் அரசும் கடந்த புதன்கிழமை கைச்சாத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜீ.எஸ்.பாலிக்காரவும், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் பசீர் வாலி மொகமட்டும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் குற்றச்செயல்களில் ஈடுபட்டு, இருநாட்டுச் சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் - தமது தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கும் அவர்கள் தமது வாழ்வை நெறிப்படுத்தி, சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கும் வழிவகுக்கும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த 40 குற்றவாளிகள் இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா செல்லவிருந்த

# கடற்படை சிப்பாய் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் விடுவிப்பு!

அமெரிக்காவிடம் வாங்கப்பட்ட கரேஜஸ் என்ற போர்க்கப்பலை அமெரிக்காவிலிருந்து, இலங்கைக்குக் கொண்டுவருவதற்காக அங்கு செல்லவிருந்த கடற்படைக் குழுவில் இடம்பெற்றிருந்த கடற்படை சிப்பாய் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு, மோசமாகத் தாக்கப்பட்டு, படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் பணியாற்றும் இந்தக் கடற்படைச் சிப்பாய் - கோட்டே பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாகச் சென்றுகொண்டிருந்தபோது, வானொன்றில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டார்.

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் இவரை மிக மோசமாகத் தாக்கிய இந்த நபர்கள், குற்றுயிரான நிலையில் சிப்பாயை ஜா - எல தண்டு கம பாலத்துக்கு அருகே வீசி விட்டுச் சென்றனர்.

குற்றுயிரான நிலையில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை மீட்கப்பட்ட இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்றுவருகிறார்.

கரேஜஸ் கப்பலை இலங்கைக்குக் கொண்டுவருவதற்காக அமெரிக்கா செல்லவிருந்த கடற்படைக்குழுவில் இடம்பெற்றிருந்த இந்தச் சிப்பாயைக் கொலைசெய்வதற்காகவே இனந்தெரியாத நபர்கள் கடத்திச்சென்றதாகவும், பின்னர் ஓடும் வானிலிருந்து தன்னை தூக்கி வீசி விட்டுச் சென்றதாகவும், காயமுற்ற கடற்படைச் சிப்பாய் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

# அம்பேபிட்டிய கொலை சூத்திரதாரி களுத்துறை சிறையில் விளக்கமறியலில்

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலையுடன் தொடர்புடைய சூத்திரதாரியான போதைவஸ்து வர்த்தகர் மொகமட் நியாஸ் நௌபர் என்ற நபரை, எதிர்வரும் 10 ஆம் திகதிவரை களுத்துறை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசேலா விஜயவர்த்தனா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இந்தச் சந்தேகநபர் பலத்த பாதுகாப்பின் மத்தியில், வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தனக்கு எந்தவித தொடர்பும் இல்லை. திட்டமிட்டுத் தன்னை இந்தக் கொலையுடன் தொடர்புபடுத்தியிருப்பதாகச் சந்தேகநபர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இவர் சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் ஆஜராகவில்லை.

குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஏனைய சந்தேக நபர்களுடன் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இவரை வைக்காமல் களுத்துறைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

மேல்மாகாணசபை உறுப்பினர் நாமல் குணவர்த்தனாவின் கொலையுடனும் இவருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றப் புலனாய்வுத் துறையினர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

# நிவாரணம் வழங்கலில் குழறுபடி இருப்பின் முறைப்பாடு செய்யுமாறு அறிவிப்பு!

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளை நிலையங்களில் நிவாரண விநியோகத்துக்காக வழங்கப்படும் பொருட்கள் குறைவாக உள்ளதாக நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தி தொடர்பாக, யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் பாவனையாளர்களுக்கென அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நிவாரணம் பெறுபவர்கள் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். அத்துடன் சிட்டைப்படி பொருட்களை சரிபார்த்து பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு மேற்கொள்வதனால் கிளைமுகாமையாளர்களால் ஏதாவது அசௌகரியங்கள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால், உடனடியாக அந்தப் பகுதி ப.நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இவ்வாறு நீங்கள் முறையிட்டும் அவர்கள் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதவிடத்து, 222-2662, 2186, 2324, 3759, 2639 இந்தத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டால், பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விகாரை வளவில் வீழ்ந்தது அரிதானதொரு விண்கல்!

## ஆய்வுகள் மூலம் தகவல்

பொலநறுவ விகாரை வளவில் அண்மையில் வீழ்ந்த விண்கல் இரும்பு சார்ந்த எளிதில் கிடைக்காத ஒரு விண்கல் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நவீனத்துவ தொழில்நுட்ப இயல்புகளுக்கான ஆதர்.சி.கிளார்க் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி சந்திரா ஜெயரத்ன இந்த விண்கல் பரிசோதனை குறித்து கருத்து வெளியிடுகையில் - கோமியம், நைற்ரேனியம் போன்ற பல இரசாயனப் பொருட்கள் இந்தக் கல்லில் அடங்கியுள்ளன.

இந்த விண்கல் எங்கிருந்து வந்து விழுந்தது என்பது பற்றி மேலும் ஆராயப்படும் என அவர் தெரிவித்தார்.

# எரிக்சொல்ஹெய்மின் வருகை 13 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது



(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான முயற்சிகளை மேற்கொள்ள எதிர்வரும் 6 ஆம் திகதியன்று இலங்கைக்கு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த எரிக்சொல்ஹெய்மின் வருகை பிற்போடப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் - எிக்சொல்ஹெய்ம், கடந்த முதலாம் திகதியன்று லண்டனில் நடத்திய கலந்துரையாடலின் பின்பே அவரது இலங்கை விஜயம் பிற்போடப்பட்டதாகத் தெரியவருகிறது.

அன்ரன் பாலசிங்கத்துக்கும், எரிக் சொல்ஹெய்முக்குமிடையில் இரண்டு மணிநேரமாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, அன்ரன் பாலசிங்கம் - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரை குறித்து விளக்கினார். அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக் களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக முக்கியமான தீர்மானங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் - எதிர்வரும் 13 ஆம் திகதியன்று இலங்கைக்கு வர இருப்பதாகச் சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் ஜெயந்த தனபால தெரிவித்தார்.

சொல்ஹெய்ம் நான்கு நாட்கள்வரை இலங்கை யில் தங்கி இருப்பார் எனவும் அந்தக்காலப் பகுதியில் அவர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் - ஆகியோருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (தே)

# நாட்டையும் மக்களையும் அரசாங்கம் தவறான பாதைக்கு கொண்டுசெல்கிறது

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் பொதுமக்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்வதுடன், நாட்டையும் தவறான வழிக்குக் கொண்டுசெல்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரத்தை ஒரு மணிநேரமாக அரசாங்கம் அதிகரித்துள்ளமையைக் கண்டித்து, பொரளை ஆயுர்வேத சந்தியிலிருந்து, நாடாளுமன்றச் சந்தி வரை ஐக்கிய தேசியக் கட்சியால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

அரசாங்கத்தின் சீரற்ற வரவு - செலவுத் திட்டத்துக்கெதிராக ஐக்கிய தேசியக் கட்சி தனது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நாடு முழுவதும் நடத்தவுள்ளது. அத்துடன், அரசாங்க ஊழியர்களுக்கான ஒரு மணிநேர வேலை அதிகரிப்பு உடனடியாக நீக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, ஐ.தே.கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்ததாவது -

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருக்கும்போது, தாம் ஆட்சிக்கு வந்தால் பொருட்களுக்கான விலைகளைக் குறைக்கப்போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்தது. ஆனால், தற்போது விலைகள் றொக்கட் வேகத்தில் வானத்தை நோக்கிச் சென்றுள்ளன.

அமைச்சரவையிலுள்ள நான்கு ஜே.வி.பி அமைச்சர்களும் என்ன செய்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஒருபோதும் மக்களது பிரச்சினை தொடர்பாக அமைச்சரவையில் கதைப்பதில்லை.

வரவு - செலவுத் திட்டத்தில் ஒரு மணிநேர வேலை அதிகரிப்புக் கொண்டுவரப்பட்டவேளை பேசாதிருந்த அவர்கள் தற்போது பொது மக்கள் மத்தியில் தம்மைப் பிரபல்யப்படுத்தவே இவ்வாறு கதைத்துக்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், வரவு - செலவுத் திட்டத்தில் 70 வீத சம்பள அதிகரிப்பு என்றார்கள். அதிலும் அரைவாசியே வழங்கப்படுமெனத் தெரிவித்து, இதிலும் அரைவாசியே நடைமுறைப்படுத்தப்படும் என்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

# இந்திய அணி வீரர்களின் தன்னம்பிக்கையை கொல்கத்தா வெற்றி அதிகரித்துள்ளது!

## இந்திய அணித் தலைவர் கங்கூலி



(டெல்கி)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாகப் பந்து வீசிய கும்ளே மற்றும் ஹர்பஜன்சிங் ஆகியோரைப் பாராட்டியுள்ள இந்திய அணித் தலைவர் கங்கூலி, பங்களாதேஷ் - பாகிஸ்தான் தொடர்கள் வரவுள்ள நிலையில் இந்த வெற்றி அணி வீரர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளதாகவும் கூறினார்.

நிம்மதியாக இருக்கிறது. இரு ஆண்டுகளாக டெஸ்ட் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி வருகிறோம். ஆனாலும், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரை இழந்தோம். இழந்த தன்னம்பிக்கையை மீண்டும் பெற இந்த வெற்றி உதவுமென உறுதியாக நம்புகிறேன்.

கொல்கத்தா டெஸ்ட் ஒரு கட்டத்தில் சம நிலையில் முடியப்போவதைப்போலத் தோன்றியது. மைதானம் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக இல்லை. ஆனாலும், நமது சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசினார்கள். இந்த வெற்றியால் அணி வீரர்கள் மெத்தனமாக இருக்கக்கூடாது. பங்காதேஷுடனும், பாகிஸ்தானுடனும் சிறப்பாக விளையாட வேண்டும்.

இந்த வெற்றியில் ஹர்பஜன்சிங்குக்கு மிகமுக்கிய பங்குண்டு. 2001 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான தொடரிலிருந்து சிறப்பாகப் பந்துவீசி வருகிறார். அவர் ஒரு வெற்றி நாயகன். அனில் கும்ளே எப்போதும் சிறப்பாகப் பந்துவீசுகிறார்.

மும்பையில் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான டெஸ்டில் மூன்று சுழல் பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கினோம். ஆனால், அந்த மைதானம் சுழல பந்துக்குச் சாதமாக இல்லை. அதேநேரம் வேகப்பந்து வீச்சுக்கும் சாதமாக இல்லை.

மைதானம் குறித்து சில எதிர்பார்ப்புக்களுடன் அணி தேர்வுசெய்யப்படுகிறது. ஆனால், சில சமயங்களில் ஆட்டம் தொடங்கிய பிறகுதான் மைதானத்தின் தன்மையை உணர முடிகிறது. 5 நாட்களுக்குப் பிறகு விமர்சனம் செய்வது சுலபம். ஆனால், ஆட்டத்துக்கு முன்னதாக சரியாக வீரர்களைத் தேர்வுசெய்வது கடினம்.

நமது தொடக்க வீரர்கள் சிறப்பான தொடக்கத்தை அளித்தார்கள். நடுவரிசை ஆட்டக்காரர்களும் சிறப்பாக விளையாடினார்கள். நாம் தற்போது டெஸ்ட்களில் 400 இற்கும் கூடுதலான ஓட்டங்களை எட்டிவருகிறோம். பங்களாதேஷுடனான ஆட்டத்தில் மைதானத்தின் தன்மையைப் பொறுத்து அணியில் சிவசங்கர் போல் இடம்பெறக்கூடும் என்றார் கங்கூலி.

இதேவேளை தோல்வி குறித்து தென்னாபிரிக்க அணி கப்டன் ஸ்மித் கூறுகையில்-

எங்கள் அணியில் முன்னணி சுழல்பந்து வீச்சாளர்கள் இடம்பெறவில்லை. ஆசியக் கண்டத்தில் முன்னணி சுழல்பந்து வீச்சாளர் இல்லாமல் ஆடுவது பலவீனமாகும். இளம் வீரர்களைக் கொண்ட எங்கள் அணி கௌரவமான முறையில் இந்த தொடரில் விளையாடி இருக்கிறது என்றார்.

## சாதனைப் பட்டியலில் பொலக் இணைவு!



கொல்கத்தாவில் இந்திய அணிக்கு எதிராகக் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 2 ஆவது இனிங்ஸ் ஆட்டத்தில் 6 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார் தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரர் பொலக், ஆட்டமிழந்தாலும் தனிச்சிறப்பு ஒன்றைப் பதிவுசெய்துள்ளார் அவர்.

300 விக்கெட், 3 ஆயிரம் ஓட்டங்களைச் சேர்த்தவர்கள் பட்டியலில் அவர் இணைந்துள்ளார். இவருக்கு முன்னதாக கபில்தேவ், இயன் பொத்தம், ரிச்சட் ஹட்லி, இம்ரான் கான் ஆகியோர் மட்டுமே இந்தச் சிறப்பைப் பெற்றுள்ளனர்.

## பங்களாதேஷுக்குச் செல்லும் இந்திய அணி அறிவிப்பு!

(டெல்கி)

பங்களாதேஷ் செல்லும் இந்திய 'அணியில் லக்ஷமன், கும்ளே ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் இந்திய அணி வீரர்களின் விபரம் நேற்று அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அணி சவால்குறைந்த அணி என்பதால், இளம் வீராகள் சிலருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டு, அனுபவம்மிக்க லக்ஷ்மன் மற்றும் கும்ளே ஆகியோருக்கு ஓய்வுகொடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் பதிலாக இளம் வீரர்களான டோனி, ஜோகிந்தர்ஷர்மா ஆகியோர் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். டோனி விக்கெட காப்பாளர் என்ற முறையில் மட்டும் அல்லாமல், துடுப்பாட்டத்திலும் சாதித்து வருவதால் அவரைப் பரிசோதித்துப் பார்க்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. அதேபோல் ஸ்ரீராம் அணியில் நீடிக்கிறார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டி வருகிற 23, 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் விபரம் வருமாறு-

சௌரவ் கங்கூலி (கப்டன்), ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், ராகுல் ராவிட், யுவராஜ் சிங், முகமட் கைவ், தினேஷ் மொங்கியா, ஸ்ரீராம், டோனி, ஹர்பஜன்சிங், இர்பான் பதான், அகர்கர், சகீர்கான், முரளி கார்த்திக், ஜோகிந்தர் ஷர்மா.

## டெஸ்ட் தரவரிசையில் இந்தியா 3 ஆம் இடத்தில்

டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் ஒவ்வொரு நாடுகளின் தரவரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது.

இதன்படி அவுஸ்ரேலியா (130 புள்ளிகள்) தொடர்ந்தும் முதலிடம் வகிக்கிறது. இங்கிலாந்து (109 புள்ளிகள்) 2 ஆவது இடம்பிடித்துள்ளது. தெனாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் இந்திய அணி (107 புள்ளிகள்) 3 ஆவது இடத்திற்கு முதல்முறையாக முன்னேயுள்ளது.

முன்பு 5 ஆவது இடத்தில் இருந்தது. பாகிஸ்தான் (105 புள்ளிகள்) 4 ஆவது இடமும், இலங்கை (103 புள்ளிகள்) 5 ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா (100 புள்ளிகள்) 6 ஆவது இடத்திலும், நியூஸிலாந்து (93 புள்ளிகள்) 7 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் (73 புள்ளிகள்) 8 ஆவது இடத்திலும், சிம்பாவே (51 புள்ளிகள்) 9 ஆவது இடத்திலும் இருக்கின்றன.

## ஆவேசமாக நடந்துகொண்டதால் கங்கூலிக்கு 30 % அபராதம்!

(கொல்கத்தா)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 4 ஆவது நாளான நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்கா 2 ஆவது இனிங்ஸில் 81 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கப்டன் ஸ்மித் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து கலிஸ் களமிறங்கினார். அவர் 2 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஹர்பஜன்சிங் வீசிய பந்தை அடித்தபோது துடுப்பு மட்டை மற்றும் காலிற்பட்டு சோட் லெக்கில் நின்ற கம்பீரிடம் பிடியாக மாறியது.

இதனால் இந்திய அணியின் கப்டன் கங்கூலி - நடுவர் டரல் ஹாப்பரிடம் ஆவேசமாக முறையீடு செய்தார். நடுவர் அதற்கு அவுட் கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் கங்கூலி கோபமடைந்தார். இதுகுறித்து நடுவர்கள் போட்டி நடுவர் குரோவிடம் புகார் செய்தனர். குரோவ் - கங்கூலியிடம் விசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் அவர் - இந்திய அணிக் கப்டன் கங்கூலிக்கு நல்ல மதிப்பு உள்ளது. எனினும், இதுபோன்ற செயல்களில் அவர் ஈடுபடுவது ஐ.சி.சி விதிகளுக்கு முரணானது. சர்வதேசப் போட்டிகளில் இதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இதனால் அவருக்கு அவருடைய ஆட்டத்தின் சம்பள தொகையில் இருந்து 30 சதவீதம் அபராதமாக விதிக்கப்படுகிறது. இதன்மூலம் அவர் பெறும் சம்பளத்தில் சுமார் 1 லட்சம் இந்திய ரூபாவை அபராதமாகச் செலுத்துவார். என அவர் கூறினார்.

கடந்த மாதம் 13 ஆம் திகதி இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழாவையொட்டி பாகிஸ்தானுக்கு எதிராக ஒருநாட் போட்டி நடைபெற்றது. இதில் பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக கங்கூலி மீது புகார் கூறப்பட்டது.

இதனால் அவர் 2 டெஸ்ட் போட்டிகளில் ஆடத் தடை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் சபை - முறையீடு செய்ததை அடுத்து அவர் மீதான தடை நீக்கப்பட்டது.

இந்த நிலையில் அவருக்கு அபராதம் விதித்தமை கிரிக்கெட் வீராகளிடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## கபில்தேவின் சாதனையை சமன்செய்தார் கும்ளே!



(கொல்கத்தா)

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழல்பந்து வீச்சாளர்களில் ஒருவர் கும்ளே. தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 434 விக்கெட்டுக்களை வீழ்த்திய இந்திய வீரரான கபில் தேவின் சாதனையைச் சமன் செய்தார். அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்களின் பட்டியலில் இவர் 5 ஆவது இடத்தில் உள்ளார்.

இந்த நிலையில் கும்ளே தனிப்பட்ட சாதனையை விட அணியின் வெற்றியே முக்கியம் எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

434 விக்கெட்டுக்களை வீழ்த்தியது மகிழ்ச்சியாக உள்ளது. இந்தச் சாதனையை அடையவேண்டும் என்ற இலக்குடன் ஆடவில்லை. சாதனையைவிட அணியின் வெற்றிக்காக விக்கெட்டுக்களை வீழ்த்துவதே பெருமை.

டெஸ்ட் போட்டியில் 500 விக்கெட்டுக்களை கைப்பற்றும் முதல் இந்திய பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெறவேண்டும். அதுவும் கைப்பற்றும் விக்கெட்டுக்கள் அணியின் வெற்றிக்காக இருக்கவேண்டும் என்பதே எனது குறிக்கோள் இவ்வாறு அவர் கூறினார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் - சாதனையைச் சமன்செய்த கும்ளேயைப் பாராட்டினார். மேலும் கும்ளே விரைவில் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவார் எனக் கூறினார்.

## விளையாட்டு



டேவிஸ் கிண்ண முதற போட்டியில் காலோஸ் மோயாவிடம் தோல்வியடைந்த சோகத்தில் அமெரிக்க வீரர் மார்டி பிஷ்



5 போட்டிகளைக்கொண்ட டேவிஸ் கிண்ண ரெனிஸ் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் காலோஸ் மோயா, அமெரிக்க வீரர் மார்டி பிஷ்ஷை 6-4, 6-2, 6-3 என்ற கணக்கில் வென்று முன்னணியில் உள்ளார்.

# கல்வியின் முக்கியத்துவம்

சென்றவாரத் தொடர்ச்சி...




## குழப்படிக்கார ராஜா




இங்கே மடிக்கவும்



# சிறுவர் அரங்கம்

# துருவன்

**என் அன்புக்குரிய சிறுவர்களே!**

வருட இறுதி விடுமுறை விடப்போகின்றார்கள். உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கும். விடுமுறையை எப்படிக் கழிக்கலாம் என்று இப்போதே யோசிக்க ஆரம்பித்திருப்பீர்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான துறையில் ஆர்வம் இருக்கும். விளையாட்டு, ஓவியம் வரைதல், முத்திரை சேகரித்தல், தொலைக் காட்சி பார்த்தல் என்று விதம் விதமாக இருக்கும்.

ஆனால் சிறுவர்களே! தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தை சிறிது குறைத்து ஆக்கபூர்வமான விடயங்களில் நேரத்தைச் செலவழியுங்கள். நிறைய வாசியுங்கள். நிறைய எனக்கு எழுதி அனுப்புங்கள். பல ஆக்கங்களை ஒரே தபாலுறையில் அனுப்புங்கள். வெவ்வேறு தபாலுறைகளில் அனுப்பத் தேவையில்லை.

பாசமுடன் சாரு அக்கா

◆ ◆ ◆

## சிறுவர்களே நீங்களும் கவிதை எழுதலாம் அல்லவா



அப்படியென்றால் ......
உங்களுக்கு எது விருப்பமானது?
அணிலா? மாம்பழமா?
அணிலென்றால் இதோ! இப்படி எழுதினால் எப்படி இருக்கும்...
அணிலே! அணிலே! ஓடி வா!
எனக்குச் சற்று அருகே வா
கனிந்த பழத்தைக் காட்டித்தா
கொறித்துப் பார்த்துப் பறித்துத் தா!
எப்படி ? அணில் கவிதையை ஆக்கியது
நீங்கள் தானே!
எங்கே - மாம்பழத்தைப் பற்றியும் எழுதுவோமா?
கறுத்தக் கொழும்பான் மாம்பழமே
கடித்துத் தின்னச் சுவைதானே
நிறத்தைப் பார்த்துப் பறிப்போமே
அறுத்துப் பகிர்ந்து சுவைப்போமே

– கிருபா

# Parrot



The parrot is a small bird.
It is green colour.
It has red rings around its neck.
It has a long tail.
It has two claws.
It has a red beak.
It eats fruits.
Some parrots can talk.
It is fun to hear a parrot talking.
some people keep parrots as pets.

இ. சுமித்திரா
தரம் -4 தொண்டைமானாறு வீ.ம.வி

# நான் யார்?

எனது பெயர் சு. சஜீவன். நான் தரம் 9B இல் கற்கிறேன். நான் இளவாலையிலுள்ள முள்ளானையில் வசிக்கிறேன். நான் யா/ புனித ஹென்றியரசர் கல்லூரியில் கற்கிறேன். எனது பெற்றோரின் பெயர்கள் சுந்தரலிங்கம் இராஜதேவி. எனது வகுப்பு ஆசிரியையின் பெயர் திருமதி. ஜெயந்தி. பிடித்த பாடம் ஆங்கிலம். பிடித்த நண்பர்கள் கண்ணன், குமரன், சுரேஸ், பிரியதர்சன், கண்ணா, கனியூப், ஜெனகாந்தன், டண்ஸ்ரன், திலக். எனது பொழுது போக்குகள் - பத்திரிகை வாசித்தல் விளையாடுதல், படித்தல். எனது குடும்பம் 05 அங்கத்தவர்களைக் கொண்டது. எனது உயிர் நண்பன் நானே தான்.

ச. சஜீவன்
முள்ளானை



அ. அச்சுதன்
தரம் - 2
யாழ். செ.அ.த.க. பாடசாலை

# குருவிக் குஞ்சும் நெருப்பும்



வயதான குருவி தன்னுடைய குஞ்சுக்கு கூட்டிலிருந்து பறக்க அனுமதியளித்தது. சிறகடித்துக் பறந்த குஞ்சு. இது என்ன? அது என்ன என்று வாய் ஓயாமல் தாயைக் கேட்டது.

பூமி, புல், மரம், கோழி, வாத்து, ஏரி என்றால் என்ன என்று அம்மா விளக்கினாள். வானத்தில் ஒரு பெரும் நெருப்பு வட்டத்தைப் பார்த்த குருவிக் குஞ்சு தன் தாயிடம் கேட்டது:

அது என்ன அம்மா?

அது சூரியன் என்றது தாய்க்குருவி

சூரியன் என்றால் என்ன? என்று விடாமல் கேட்டது சின்னக்குருவி.

அது நெருப்பு. தொட்டால் சுடும். - என்று பதில் சொல்லியது தாய்க்குருவி.

நெருப்பெண்டா என்னென்று தெரியவேணும் - என்று சொல்லிய குருவிக் குஞ்சு, சூரியனை நோக்கி மேன் மேலும் உயரே பறந்தது.

தன்னுடைய மெல்லிய சிறகுகள் சூடுபட்டுக் கருகும் வரை அது பறந்தது. அதற்குமேல் பறக்கமுடியாமல் அது திரும்பியது.

கவலையுடன் இருந்த அம்மாவால் ஒரு வார்த்தைகூடக் கதைக்க முடியவில்லை.

இப்ப நெருப்பெண்டா என்னெண்டு எனக்குத் தெரியும் - என்றது குருவிக்குஞ்சு.

இங்கே மடிக்கவும்



# இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)



பளபளப்பான அந்தக் கண்ணாடி அலமாரிகளைப் பார்த்ததும்தான் இளையதம்பிக்கு ஒருவிடயம் ஞாபகத்துக்கு வந்தது. முன்னர் ஒரு தடவை நல்லம்மையாருடன் சேர்ந்து நகை வாங்க வந்திருந்த போது, வயதான கிழவர் ஒருவர் ஈரத் துணியால் காட்சி அலமாரிகளை சுத்தமாகத் துடைத்துக் கொண்டிருந்தார்.

கிழவரது பெயர் பரமசிவம் என்றும் பண்பான மனிதர் அவர் என்றும் முத்துவேலு அவரைப் பற்றிச் சொல்லியிருந்தார். முத்து வேலுவின் தந்தையார் திருவாளர் மயில் வாகனத்தின் வயதை ஒத்தவர் பரமசிவம். வயதிலும் தோற்றத்திலும் பரமசிவம் மறைந்த தனது தந்தையாரை ஒத்திருந்ததால் அவர்மேல் அளவில்லாத பாசத்தைக் காட்டி வழமைக்கு அதிகமாக சம்பளமும் கொடுத்தார் முத்துவேலு.

கடைசியில் பரமசிவத்தை இன்றைக்குக்காணவில்லையே உடல்நிலை சரியில்லாததால் இன்றைக்கு வேலைக்கு வரவில்லையா?

அப்படியானால் இன்றைக்கு கடையைச் சுத்தம் செய்தது யாராயிருக்கும்?

இவ்வாறாகப் பல கேள்விகள் இளைய தம்பி யின் மனதிலே பிறந்தன. மனதிலே பிறந்த கேள்விகளுக்கான பதிலை உடனடியாகவே முத்து வேலுவிடம் கேட்டறிந்திட அவர் துடியாய்த்துடித்தார். துப்பறியும் வேலையில் நேரம் பொன்னைப் போன்றது. நாம் வீணாக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் குற்றவாளி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தப்பித்திடப் பார்ப்பான்.

அன்பரசன்



முத்துவேலு வியாபாரத்தில் மும்முரமாய் இருப்பதைக் கண்ட இளையதம்பி, அவரைத் தொந்தரவு செய்ய விரும்பாது கடையின் ஒரு மூலையில் கதிரையொன்றிலே ஓய்வாக அமர்ந்திருந்த வேலையாளர் ஒருவரைத் தன்னருகே கூப்பிட்டு உங்களது பெயர் என்ன என்று கேட்டார். எனது பெயர் அன்பரசன் ஐயா என்று அந்த வேலையாள் பணிவாகப் பதில் சொன்னார்.

சரி அன்பரசன் நான் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லி விட்டு நீங்கள் போகலாம் என்று அவரைப் பார்த்துச் சொன்ன இளையதம்பி உங்கள் கடையில் முன்னர் பரமசிவம் என்பவர் சுத்தம் செய்யும் வேலை யைச் செய்து வந்தாரே அவர் இன்றைக்கு வேலைக்கு வரவில்லையா? என்று கேட்டார்.

இல்லை பரமசிவம் மூன்று மாதங்களுக்கு முன்னதாக வேலையை விட்டு நின்று விட்டார். அவரது மகன் வெளிநாட்டுக்குச் சென்று உழைக்கத் தொடங்கியதால், இப்போது அவருக்குக்கஷ்டமில்லை.தோட்ட வேலைகளைக் கவனித்துக் கொண்டு அவரும் மனைவியாரும் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்று சொன்னார் அன்பரசன். அன்பரசன் சொன்னதையெல்லாம் கவனமகக் கேட்ட இளையதம்பி ஓ அப்படியா விஷயம். பரமசிவம் வேலையிலிருந்து ஓய்வெடுத்து நன்று விட்டார். நின்று விட்டாரா நல்ல மனிதர் கடைசிக் காலத்திலாவது பிள்ளையால் அவருக்கு ஆறுதல் வந்ததே என்று சொன்னார்.

புதிய வேலையாள் யார்?

பரமசிவத்தைப் பற்றிய பேச்சை முடித்துக் கொண்ட இளையதம்பி அன்பரசனைப் பார்த்து அப்படியானால் இப்போது அந்த வேலையைச் செய்வது யார் என்று கேட்டார்.



நாதன் என்று புதிய பையன் தான் இப்போது கடையை சுத்தம் செய்யும் வேலையைச் செய்து வருகிறான். நாதன் இங்கு தானிருந்தான் அவனை நீங்கள் பார்க்கவில்லையா? நீங்கள் வந்தபோது பட்டறையில் வேலையாயிருந்தான் போலிருக்கிறது. இதோ நான் போய்க் கூட்டி வருகிறேன் என்று சொல்லிய அன்பரசன் பட்டறைக்கு விரைந்து சென்றார்.

வைரத்தைக் காணவில்லை என்று கடைசியில் எல்லாரும் கலக்கத்தோடு இருக்கும் போது நாதன் மட்டும் ஏன் இப்போது வேலையில் மும்முரமாயிருக்கிறான்? முத்துவேலுவும் பரமசிவத்துக்குப் பதிலாக புதிதாகக் கடையில் வேலை செய்பவனைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தை கூடச் செல்லவில்லை. சரி நாதன் வரட்டும் எப்படி என்று பார்க்கலாமென நினைத்துக் கொண்டார் இளையதம்பி.

நாதன்

அன்பரசன் நாதனைக் கூட்டிக்கொண்டு வந்தார். நாதனுக்கு சுமார் இருபது வயதிருக்கும்.

# தொலைந்த வைரம்

பொது நிறமும், ஒல்லியான உடல் வாகும் கொண்ட அந்த இளைஞனின் கண்களில் ஒருவிதமான மிரட்சி பரவியிருந்ததை இளையதம்பியின் கழுகுக் கண்கள் கவனித்திடத் தவறவில்லை. முதல் பார்வையிலேயே நாதன் மேல் ஏனோ சிறிது சந்தேகம் கொண்டார் இளையதம்பி.

வா நாதன் தனி யாக உன்னுடன் சிறிது பேசவேண்டும் என்று சொல்லி அவனைக் கடையின் வெளிப்பக்கமாக அழைத்து வந்தார் இளையதம்பி. கூடவே வந்த அன்பரசனைப் பார்த்து அன்பரசன் உங்களுக்கு மிகவும் நன்றி நீங்கள் போகலாம் என்று சொல்லி அனுப்பி விட்டு நாதனைப் பார்த்தார்.

நாதன் முகம் சலனம் ஏதுமின்றி அமைதியாயிருந்தது. கடையிலிருந்து இன்றைக்கு வைரம் ஒன்று காணாமல் போய்விட்டதை நீ அறிவாய்தானே நாதன் என்று சிறிது கடுமையான குரலில் கேட்டார் இளையதம்பி. ஓமோம் எனக்குத் தெரியும் என்று பதில் சொன்னான் நாதன். நான் கடைக்கு வந்தபோது உன்னைப் பார்க்கவில்லையே அப்போது நீ எங்கே போயிருந்தாய்? என்று இளையதம்பி கேட்டார்.

இன்றைக்கு நான் வேளைக்கு வீட்டுக்குப் போகவேண்டும். முத்துவேலு ஐயாவிடம் அதற்கு அனுமதி கேட்டுவிட்டேன் அதனால் விரை வாக வேலையைச் செய்து முடிப்பதில் மும்முரமாயிருந்தேன். அத்துடன் என்னைத்தான் ஏற்கனவே நன்றாகச் சோதனையிட்டுப் பார்த்தும் விட்டார்களே பின்னர் எதற்காகச் செய்யும் வேலையை இடையில் விட்டு விட்டு வெளியே வரவேண்டும் என நினைத்தேன் என்று மூச்சு விடாது பதில் சொல்லி முடித்தான் நாதன். அவனது குரலில் அலட்சியமும் கோபமும் கலந்திருந்தது. கேட்கும் கேள்விகளுக்கு ஓரிரண்டு வார்த்தைகளில் பதில் தந்து விட்டுப் பேசாமடந்தையாய் இருந்திடும் நாதன் மேல் இளையதம்பி கடும் கோபம் கொண்டார். எனினும் அவசரப்பட்டு வேலையைக் கெடுத்துவிட விரும்பாது பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாயிருந்தார்.

(தொடரும்)



1. இந்தக் கயிற்றில் எத்தனை முடிச்சுக்கள் உள்ளன?

2. இந்தச் செவ்வகத்தை இரண்டு நேர்கோடுகள் மூலம் நான்கு பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். பிரித்த ஒவ்வொரு பகுதியிலும் ஒரு கறுப்புப் புள்ளி இருக்க வேண்டும்.



## விடுகதைகளும் விடைகளும்

1. இடி இடிக்கும். மின்னல் மின்னும். மழை பெய்யாது. அது என்ன?
2. எம் தலையில் விழுவதை, இவன் தலையில் போட்டுக் கொள்வான். அது என்ன?
3. முகத்தைக் காட்டுவான். முதுகைக் காட்டமாட்டான். அவன் யார்?
4. காலைக்கடிக்கும். செருப்பு அல்ல, காவலுக்கு உதவும். நாயுமல்ல; அது என்ன?

விடைகள் 1. வெடி 2. குடை 3. கண்ணாடி 4. முள்

## மூளைக்கு வேலை

சில பெண்கள் கடைக்குச் சென்றனர். ஒவ்வொருவரும் ஒரே தொகைக்குப் பொருட்களை வாங்கினர். அவர்கள் செலவழித்த மொத்தத் தொகை ரூபா 203. எந்தப் பொருட்களும் ரூபா 10 இற்குக் குறைவாக இருக்கவில்லை. அப்படியானால், கடைக்குச் சென்ற பெண்கள் எத்தனை பேர்? பொருட்களின் விலை என்ன?

## சென்றவார விடைகள்

1. மூன்று லீட்டர் பாத்திரத்தில் பாலை எடுத்து, 5 லீற்றர் பாத்திரத்தில் ஊற்ற வேண்டும். மீண்டும் மூன்று லீற்றர் பாத்திரத்தில் பாலை எடுத்து, 5 லீற்றர் பாத்திரத்தில் ஊற்றவேண்டும். அதில் ஏற்கனவே 3 லீற்றர் பால் இருப்பதால், 2 லீற்றர் பாலை மேலும் விடலாம். 3 லீற்றர் பாத்திரத்தில் 1 லீற்றர் பால் மிச்சமாகும். அதை வாடிக்கையாளர்களுக்கு கொடுத்து விட்டு, மீண்டும் மூன்று லீற்றர் பாத்திரத்தில் பாலைக் கொடுத்தால், வாடிக்கையாளர் கேட்ட 4 லீட்டர் பால் அவருக்குக் கிடைக்கும்

இங்கே மடிக்கவும்

## ஓவியம் வரைந்து பழகுவோம்

படம் 1, படம் 2, படம் 3 ஐ பாருங்கள். அருகில் உள்ள கட்டத்தில் அவற்றை வரையுங்கள்





ஐந்து பறவைக்கும் ஒவ்வொரு வண்ணம் தீட்டி, அவற்றின் பாதையைக் கண்டு பிடியுங்கள்.

# முல்லா காட்டிய வழி



ஒருநாள் முல்லா, தெருவழியே சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஊருக்குப் புதியவன் ஒருவன் முல்லாவை நெருங்கி, முல்லா எந்த வழியால் தலைநகருக்குச் செல்வது? என்று கேட்டான்.

அதற்கு முல்லா நான் முல்லா என்று உனக்கு எப்படித் தெரியும்? – என்று கேட்டார். புதியவன் முல்லாவை தற்செயலாக முல்லா என்று அழைத்தது சரியாகப் போய்விட்டது.

ஆனால் அவன் அதைக் கூறாமல் தன் திறமையை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பி, உங்கள் முகத்தைப் பார்த்து நீங்கள் முல்லா என்று அறிந்துகொண்டேன் – என்று பெருமையுடன் சொன்னான்.

அதைக்கேட்ட முல்லா அப்படியா! நீ திற மைசாலிதான். எதிரே உள்ள இந்த வீதிகளைப் பார்த்து எது தலைநகருக்குச் செல்லும்வழி என்பதை யும் அறிந்துகொள் என்றார்.

◆ ◆ ◆ ◆ ◆

# நாம் வாழும் உலகம்



வில்லியம் ஹேர்ஷல் என்ற பிரித்தானிய விஞ்ஞானி தான் செய்த ஆராய்ச்சிகளின் விளைவாக மேலும் பல உண்மைகளைக் கண்டறிந்தார்.

இதுவரையில் எண்ணியிருந்தபடி சூரியன் அண்டத்தின் மத்தியில் இல்லை. பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்களைப்போலவே சூரியனும் ஒன்று என்று கூறினார்.

தான் செய்த ஒரு தொலைநோக்கியின் உதவியால் 1781 ஆம் ஆண்டில் யுறேனஸ் என்ற கிரகத்தையும் கண்டுபிடித்தார். பல நட்சத்திரக் கூட்டங்களையும், அவற்றின் தூரங்களையும் அறிந்த அவர் சில நட்சத்திரங்களிலிருந்து ஒளி பூமியை வந்தடைய இருபது கோடி வருடங்கள் செல்கின்றன – என்றும் கூறியிருக்கிறார்.

# இதிலுள்ள 5 வித்தியாசத்தை கண்டுபிடியுங்கள்



இங்கே மடிக்கவும்



# அண்ணனும், தங்கையும்

## மின்னலால் நன்மைகள் உண்டா?

மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. குழலி முன் அறையில் இருந்து பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தாள். அதில் வந்திருந்த இடிமின்னல் என்ற செய்தி அவளை யோசிக்க வைத்தது. அறைக்குள் வந்த சங்கர் குழலியைப் பார்த்தார்.



**சங்கர்** – என்ன குழலி யோசிக்கிறாய்?

**குழலி** – மின்னலால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். மின்னலால் நன்மைகள் எதுவும் இல்லையா அண்ணா?

**சங்கர்** தீமைகளைவிட நன்மைகள் தான் அதிக முக்கியத்துவம் வாய்ந்தன. காற்று மண்டலத்தில் நைதரசன் என்ற வாயு அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால் தாவரங்களால் இதனை வாயு நிலையில் பயன்படுத்த முடியாது. நைத்திரேட் என்ற அயன்களாகவே, இவை மண்ணிலிருந்து உறிஞ்சப்படுகிறது. காற்று மண்டலத்தில் உள்ள நைதரசன் வாயுவைத் தாவரங்கள் அயன்களாக உறிஞ்சக் கூடியவாறு மாற்றி அமைக்க, மின்னல் பெரும்பங்காற்றுகிறது.

**குழலி** – எங்கட உடம்புக்குத் தேவையான அயன்சத்து மாதிரியா?

**சங்கர்** –ஓம் குழலி. தாவரங்களுக்கும் உணவுச்சத்து தேவைதானே! குழலி! வருடந்தோறும் மின்னலால் எத்தனைதொன் நைத்திரேட் புவி முழுவதும் உருவாக்கப்படுகிறது என்று தெரியுமா?

**குழலி** – தெரியவில்லை அண்ணா.

**சங்கர்** 100, 000, 000 தொன் நைத்திரேட் உருவாக்கப்படுகிறது. இது மட்டுமல்ல பூமியில் முதன் முதலில் உயிரினங்கள் தோன்றியதிலும் மின்னலின் பங்கு குறிப்பிடத்தக்கது. எதற்கும் மின்னல் அடிக்கும்போது கவனமாகவும், அவதானமாகவும் இருக்க வேண்டும்.

# சிரியுங்கள்



அம்மா – இண்டைக்கு பள்ளிக்கூடத்தில என்ன படிச்சனீங்கள்?
ராமு – எப்படி எழுதுவது என்று படிச்சனாங்கள்.
அம்மா – என்ன எழுதினனீங்கள்?
ராமு – எனக்குத் தெரியாது! எப்படி வாசிக்கிறதெண்டு இன்னும் படிக்கேல்ல.



ரவி – அப்பப்பா நீங்கள் கச்சான் சாப்பிடுவீங்களா?
அப்பப்பா – இல்லை ரவி. கச்சானைச் சப்பிச் சாப்பிட எனக்குப் பல்லுகள் இல்லை.
ரவி – அப்ப அப்பப்பா! நான் பின்னேரம் பள்ளிக்கூடத்தால வரும்வரைக்கும் இந்தக் கச்சான் போத்தில வைச்சிருங்கோ.



ஆசிரியை – இரண்டு மாம்பழங்கள் இரண்டு வாழைப்பழங்கள் இவை ஒவ்வொன்றையும் பத்துத் துண்டுகளாக வெட்டி அவற்றுடன் ஐந்து திராட்சைகளைச் சேர்த்தால் என்ன வரும்?
மாணவன் – பழக் கலவை கிடைக்கும் ரீச்சர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்.

திருக்குறள்

## நமது நோக்கு

# நாடாளுமன்றமா? போராளுமன்றமா?

முன்னெப்போதும் இல்லாதவாறு ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்புக்களை ஏற்றபின்னர், நாடாளுமன்ற அமர்வுகள் ஜனநாயகப் பண்புகளற்ற தன்மையுடன் கூடிய நிகழ்வுகளை உள்ளடக்கியதாக - இன்னும் தெளிவாகச் சொல்வதானால் அரசியல் நாகரிகம் அறியாதவர்களின் அடாவடித்தனங்களைக் கொண்டதாக மாறிவிட்டமை அவமானத்திற்கும்த கவலைக்கும் உரியதாகும்.

ஐந்து மாதங்களின் முன்னர் நாடாளுமன்ற முதல் அமர்வின்போது, அதாவது சபாநாயகர் தெரிவுக்கான தேர்தலின் போது ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய உறுப்பினர்களின் ஜனநாயக அரசியலின் அரிச்சுவடி தெரியாத் தன்மையின் காரணமாக நிகழ்ந்த மோதல்களும், குழப்பங்களும் நாடாளுமன்றத்தையே ஒரு வன்முறைக் களமாக்கியது. ஒரு சபாநாயகரை அமைதியாகவும், நேர்மையாகவும் ஆரவாரமோ, குழறுபடிகளோ இன்றி அமைதியாகத் தெரிவுசெய்யும் நாகரிகம் அற்றவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்டதை தொலைக் காட்சிகளில் பார்த்தும் ஊடகங்களுடாக அறிந்தும் உலகமே நகைத்தது.

சக உறுப்பினர்களை நோக்கி ஆவணக்கோப்புகள் அறிக்கைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேசை யில் இருந்த பொருட்களை வீசியெறிந்தும் நாகரீகமற்றவர்கள் மட்டுமே பயன்படுத்தும் சொற்களாற் திட்டியும், வணக்கத்துக்குரியவர்கள் என்று தாங்களே வர்ணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிக்குகளின் அங்கிகளை இழுத்தும் வாக்குப் பெட்டிகளைத் தூக்கித் திரிந்தும், நாடாளுமன்ற செங்கோலை எடுத்துச் செல்லமுயன்றும் காடைத்தனம் செய்தவர்கள் பெரும்பாலும் அரசுக்குச் சார்பானவர்களே. அதிலும் குறிப்பாக ஜே.வி.பி என்ற முன்னாள் கிளர்ச்சிக் குழுவைச் சேர்ந்தவர்களே என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

ஒரு காலத்தில் நாடாளுமன்ற ஆட்சிமுறையை எதிர்த்து புரட்சி என்ற பெயரில் கிளர்ச்சி ஒன்றைச் செய்து அவமானகரமான தோல்வியைத் தழுவியவர்கள், இப்போது நாடாளுமன்றத்திற்குள் கிளர்ச்சிகளை நடத்தும் பேர்வழிகளாக - ஆட்சியின் பங்காளிகளாக அமைந்தது தென்பகுதி மக்களின் அரசியல் அறியாமைக்குச் சான்றாகவும் அமைந்தது.

இந்தக் குழப்பவாதிகளிடையே தர்மராஜ்ஜியம் அமைக் கப் புறப்பட்ட ஹெல உறுமய பிக்குகளும் இருப்பதுதான் விணோதமான செய்தியாகும்.

எப்படியோ பேரினவாத சிந்தனையாளர்களையும், சமாதான எதிர்ப்பாளர்களையும் மனித உரிமைகளை மதிக்கும் நாகரீகம் இல்லாதோரையும் உள்ளடக்கியதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி அமைந்தது. இலங்கையில் ஜனநாயகம் மீது வைத்திருந்த சொற்பளவு நம்பிக்கையையும் இல்லாமற் செய்துவிட்ட நிலையில் நாடாளுமன்ற அமர்வுகளும், நிகழ்வுகளும் வன்முறையாளர்களின் சந்திச் சண்டைச் சம்பவங்களாகத் தொடர்ந்தும் நடைபெற்று வருவதையே கவலையுடன் அவதானிக்க முடிகிறது.

கடந்தபல தசாப்த காலமாகவே இலங்கை நாட ாளுமன்றமானது தமிழ் மக்களின் உரிமைகளை மதிக்காத, பௌத்த சிங்கள இனவாதத் தலைமைகளின் ஆதிக்க மைய மாகவே விளங்கி வந்துள்ளதை அனைவரும் அறிவர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடாளுமன்ற உரிமைகளை மறுப்பதும், அவர்களை அவமதிப்பதும், பல வேளைகளில் அச்சுறுத்துவதும்கூட சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலாசாரமாகவும் இருந்து வந்துள்ளது.

ஆர்.ஜி.சேனநாயக்க, கே.எம்.பி.ராஜரத்ன, றொபேர்ட் குணவர்த்தனா, நெவில் பெர்னாண்டோ,சிறில் மத்தியூ எனத் தொடரும் இவர்களின் தொடர்பட்டியல் இன்றைய ஜே.வி.பி.க்காரர் வரை தொடர்ந்து நீண்டுகொண்டே வருகிறது.

நேற்றுமுன்தினமும் நாடாளுமன்றம் அமளிதுமளிப்பட்டுள்ளது. மகேஸ்வரன் எம்.பி.யைத் தாக்க ஆளும் கட்சியின் கலாட்டாப் பேர்வழிகளான சில உறுப்பினர்கள் முஷ்டியை முறுக்கிக் கொண்டு பாய்ந்து சென்றுள்ளனர். மேவின் சில்வா, டிலான் பெரேரா, தி.மு.தஸநாயக்க ஆகியோரே அடிதடி நடவடிக்கைகளில் இறங்க முயன்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் என்று கூறப்படுகிறது. இந்த ஜனநாயகப் பண்பாளர்கள் (?!) தான் மிகவும் கேவலமான, அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டவர்களுமாவர். இந்தச் சமயத்தில் நாடாளுமன்ற நிகழ்வுகளைப் பார்க்க வந்து, பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்த பாடசாலை மாணவர்களை வெளியேற்றுமாறு சபாநாயகர் பணித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அநாகரீகச் செயற்பாடுகளால் சபையின் கௌரவம் பாதிக்கப்படும் என்றே சபாநாயகர் மாணவர்களை வெளியேற்றினாராம்!

வெட்கக்கேடு!

உண்மையில் மாணவர்கள் தொடர்ந்தும் இந்த அரசியல் அநாகரீகங்களின் நடவடிக்கைகளைப் பார்க்க சபாநாயகர் அனுமதித்திருக்கவேண்டியது அவசியமாகும்.

அப்போதுதான் எதிர்காலத்தில் சரியான அரசியல் - ஜனநாயகப் பண்பு கொண்டோரை அவர்களின் காலத்திலாவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யவேண்டிய அவசியத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளும் எண்ணம் உருவாக வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

எப்படியோ சிறிலங்காவின் நாடாளுமன்றம் இப்போது போராளுமன்றமாகிவிட்டது என்று நண்பர் ஒருவர் கேலியாகக் கூறுவதில் உண்மையிருக்கிறது என்றால் அதில் தவறேயில்லை.

இந்தப் போராளுமன்றம் நாட்டிற்கு அமைதியையும், சமாதானத்தையும் கொண்டுவரும் என எவரும் நம்புவது சாத்தியமற்ற விடயமேயாகும்.

## நாடும் நடப்பும்




# யுத்தத்தில் ஊனமுற்ற படையினர் அரசாங்கம் மீது கடும் கண்டனம்!

யுத்தத்தால் ஊனமுற்ற இராணுவத்தினர் தங்களுக்குரிய ஓய்வூதியத்தை உடன் வழங்கவேண்டும் என அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து நேற்றுமுன்தினம் இராணுவ தலைமையகத்திற்கு முன்பாகக்கூடிய - யுத்தத்தில் ஊனமுற்ற இராணுவத்தினரின் சங்கப் பிரதிநிதிகள் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகைக்குச் சென்று இது பற்றிய மகஜரொன்றைக் கையளிக்கவிருந்த போதிலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு இல்லாத காரணத்தால் அது சாத்தியப்படவில்லை.

இராணுவ தலைமையகத்திலிருந்து அலரி மாளிகை வரை சக்கர நாற்காலிகளில் இந்தப் படையினர் சென்றிருந்தார்கள்.

பிரதமர் அங்கு இல்லாத நிலையில் தங்கள் மகஜரை நாடாளுமன்றத்தில் அவரைச் சந்தித்து கையளிக்கக் குறிப்பிட்ட சங்கப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

தாம் கவனிப்பின்றிக் கைவிடப்பட்டது குறித்து ஆட்சியிலிருந்த மற்றும் தற்போது ஆட்சியிலிருக்கும் ஆட்சியாளர்கள் மீது கடுமையான அதிருப்தியையும் கண்டனத்தையும் சங்கத்தின் தலைவர் அசோகா தயாரத்ன வெளியிட்டார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்:-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 வருட சேவையின் பின்பு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகின்றார்கள். ஆனால் நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணித்து ஊனமுற்ற இராணுவத்தினர் ஓய்வூதியம் பெறுவதற்கு 12 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டும்.

இது தொடர்பாக சகல அரசாங்கங்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திய போதிலும் சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

அரசியலே யுத்தத்தை தீர்மானித்தது. அரசியலுக்காகவே யுத்தம் செய்ய நேரிட்டது. யுத்தம் அரசியல் நோக்கத்தைக் கொண்டது. அரசியல்வாதிகளின் சுயலாபப் போக்குகளால் தான் இந்த நாடு யுத்த பூமியாகியது.

எந்த அரசியல் கட்சியை எடுத்தாலும் நாட்டின் பொருளாதாரத்தை விட யுத்தத்தை முன்வைத்தே அன்றும் சரி இன்றும் சரி அரசியல் வேலைத்திட்டங்களை தீர்மானிக்கின்றார்கள்.

கடந்த 20 வருட கால யுத்தத்தில் பல ஆயிரக் கணக்கான இராணுவத்தினரும் பொலிசாரும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் பணக்காரர்கள் அல்ல, ஏழைகள். இவர்கள் ஊனமுற்றுள்ளார்கள். ஊனமுற்றவர்களைப் பற்றி எவரும் இப்போது நினைத்துப் பார்ப்பதில்லை.

தற்போது யுத்த நிறுத்த சூழல் நிலவுவது மகிழ்ச்சிக்குரியது. இதன் காரணமாக கடந்த இரண்டு வருட காலங்களாக படை வீரர்கள் உயிரிழக்கவில்லை. அவர்களின் மனைவிமார்கள் விதவைகளாகவில்லை. ஏழைப் பெற்றோர்கள் பிள்ளைகளை இழக்கவில்லை. இராணுவ வீரர்கள் ஊனமடையவில்லை எனவும் தெரிவித்தார்.

# சந்தேக நபரை மூன்று நாட்கள்வரை தடுத்துவைத்து விசாரணை செய்வது மனித உரிமையை மீறும் செயலாகும்

## காந்திசேவா சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

குற்றவியல் சட்டக் கோவையில் திருத்தம் செய்து குற்றம் இழைத்தவராகச் சந்தேகிக்கப்படும் நபரை, மூன்று நாட்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, விசாரணைக்கு உட்படுத்தும் சட்டத் திருத்தம் மனித உரிமைகளைப் பாதிக்க வழிவகுக்கும் என மட்டக்களப்பு காந்தி சேவா சங்கச் செயலாளர் கதிர்பாரதிதாசன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூலம் படையினரால் கைது செய்யப்பட்ட நபர்கள் இருபத்திநான்கு மணித்தியாலயத்திற்குள் நீதிமன்ற நீதிபதியின் முன் நிறுத்தப்படாமல் இராணுவ முகாம்களிலும், தடுப்பு முகாம்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் தடுத்துவைக்கப்பட்டதுடன், வழக்குகள் தாக்கல் செய்யப்படாமல் தடுத்துவைக்கப்பட்டனர். அத்துடன் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும், ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். இதற்கு அந்தக்கால கட்டத்தில் இருந்த சட்டங்களே காரணமாகும்.

தற்போது அந்தச் சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தூவல் நீர்ப்பாசனத் திட்டத்தை குடாநாட்டில் அமுல்படுத்த முடிவு!

யாழ்.குடாநாட்டில் தூவல் நீர்ப்பாசனத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான கூட்டம் ஒன்று யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நீர்ப்பாசனத் திட்டமானது செலான் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்புடைய நேற்றைய கூட்டத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர், மாநகர ஆணையாளர் உட்பட இதனுட்ன் தொடர்புடைய பலரும் கலந்துகொண்டனர். இதேவேளை, இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்றுமுன் தினம் புத்தூரில் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கூட்டங்களில் இந்தத் திட்டத்துக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை, கொழும்பிலிருக்கும் பிரபல கம்பனிகளிடமிருந்து பெற்று குடாநாட்டு விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் சிறந்த பயனாளிகளை தெரிவு செய்தல், கமக்காரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன. ஆரம்பத்தில் பயனாளிகள் தெரிவு புலோலி, புத்தூர் போன்ற இடங்களில் இருந்து இடம் பெற இருக்கிறது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ். மேலதிக அரசாங்க அதிபர், இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் மேலும் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் உணர்வெழுச்சிக்கு மத்தியில் தோல்வி கண்டு வரும் இனவாத வியூகங்கள்

வல்வெட்டித்துறை - ஊரிக்காட்டுப் பகுதியில் அண்மையில் விளையாட்டு மைதானமொன்றில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது படையினர் அல்லது படையினருடன் இணைந்து செயற்படும் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டமையானது, படையினர் மீண்டுமொருமுறை தமது படுகொலை நாடகத்தைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளமையையே தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற காலமும், இடமும் இந்தச் சம்பவத்தை யார் நடத்தியிருப்பார்கள் என்பதை மிகவும் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் இராணுவத்தினரின் மினி முகாம் ஒன்றுள்ளது. சற்றுத் தொலைவில் அதாவது 400 மீற்றர் தொலைவில் மயிலியதனை முகாமும், 500 மீற்றர் தொலைவில் வல்வெட்டித்துறைச் சந்தியில் மற்றொரு முகாமும் அமைந்துள்ளது.



தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தையும், தமிழீழ தேசிய மாவீரர் தினத்தையும் எழுச்சி பூர்வமாக முன்னெடுப்பதற்குத் தமிழீழ மக்கள் தயாராகி வந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட கருணா என்ற நபரைப் பயன்படுத்தி, இராணுவப் புலனாய்வுத்துறையினரால் கிழக்கில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் மீதும், அவர்களது அலுவலகங்கள் மீதும் தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான தொடர் தாக்குதல்கள் மூலம் கிழக்கை ஒரு கொதிநிலைக்குள், பதற்றத்திற்குள் வைத்து மக்களைக் குழப்பி, விடுதலைப்புலிகள் மீது மக்களை வெறுப்படையச்செய்வதன் மூலம், விடுதலைப் போராட்டத்தைக் குலைக்கலாம், அல்லது மக்களுக்கும், விடுதலைப் போராட்டத்துக்குமான பிரிக்கமுடியாத தொடர்பை அந்நியப்படுத்தி விடலாம் என்பதே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் பகற்கனவாகும்.

இவ்வாறு கிழக்கில் நடைபெறும் சம்பவங்களைப் போன்று, யாழ்.குடாநாட்டிலும் தமது திட்டங்களை, அதுவும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் நடத்தினால், மக்களுக்கும், புலிகளுக்கும் இடையிலான தொடர்பைச் சிதைக்கலாம் எனப் படைத்தரப்பு எண்ணியிருக்கலாம். ஆனால் அவர்களின் எண்ணம் ஈடேறாது போய்விட்டது. படுகொலை நடந்த உடனும், மறுநாளும் வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்புணர்வால் அவர்களின் கனவு புஷ்வாணமாகிப் போனது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

வல்வெட்டித்துறைச் சம்பவத்தில் காயமடைந்த தெய்வேந்திரம் என்பவர், தான் காயமடைந்தவுடன் படையினரின் முகாமுக்கே சென்றதாகவும், அவர்களே தன்னை வைத்தியசாலையில் அனுமதித்தாகவும், பலாலி இராணுவ வைத்தியசாலையிலிருந்து தனியார் வானொலியொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

ஆனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், தான் யார் மூலம் அனுமதிக்கப்பட்டார் என்பதை வைத்திய அதிகாரிக்கு தெரிவிக்க மறுத்ததாக, மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். அத்துடன் சம்பவம் நடந்த மறுநாள் வைத்தியசாலைக்குச் சென்ற படையினர், தனது அனுமதியில்லாமலேயே, வைத்தியசாலைச் சட்டதிட்டங்களுக்கு மாறாக அவருக்கு இராணுவச் சீருடை அணிவித்து அவரைப் பலாலி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

காயமடைந்த ஒருவரை, ஆயுதங்களுடன் வைத்தியசாலை வளவுக்குள் சென்ற படையினர் இராணுவச் சீருடை அணிவித்து ஏன் பலாலி படைத் தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும்? என்ற வினா பாரிய சந்தேகத்தை அனைவர் மனதிலும் ஏற்படுத்தியமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

காயமடைந்தவரிடம் நடந்த சம்பவத்தின் உண்மைத் தன்மையைக் கேட்டறிந்து வெளிப்படுத்த ஊடகவியலாளரை அனுமதித்திருக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு மறுத்த படையினர் மாவட்ட வைத்திய அதிகாரியைக் கூட வைத்தியசாலையை விட்டு வெளியே செல்லக்கூடாதெனவும், ஒருவருடனும் கதைக்கக் கூடாதெனவும் தெரிவித்தனர்.

அத்துடன் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னரே காயமடைந்தவர் அங்கிருந்து பேட்டி வழங்கியுள்ளார். இவ்வாறெனில், இதில் ஏதோ தில்லு, முல்லு இடம்பெற்றுள்ளதென்பது ஆதார பூர்வமாக நிரூபணமாகின்றதல்லவா?

இந்தப் படுகொலைச் சம்பவத்துக்கு மறுநாள் சனிக்கிழமை, எதிர்ப்புத் தெரிவித்த இளைஞர்கள் மீது மீசாலையில் படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். இதனையடுத்து ஆத்திரம் கொண்ட பொது மக்கள் புத்தூர் சந்தியில் அமைந்திருந்த படையினரின் முகாமை தீயிட்டு அழித்தனர் என்பதையும், சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனவே காலம் காலமாக தமிழ் மக்களையும், அவர்களது சுதந்திர உணர்வையும் தமது பேரினவாத கரங்கள் கொண்டு நசுக்கி வந்த சிங்களப் பேரினவாதிகளும், சிங்கள ஆட்சியாளர்களும், அவர்தம் படைகளும் இனியும் தமிழ் மக்கள் மீது தமது இஷ்டப்படி வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடமுடியாதென்பதை தமது கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் மக்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வீறுகொண்டெழுந்து, இன்று பெருவிருட்சமாக கிளை பரப்பி நிற்கையில், அதற்காகத் தம்முயிரை 18,000 ற்கும் மேற்பட்ட போராளிகள் ஈய்ந்து மாவீரர்களாகி விதையாகி உள்ளனர்.

எனவே இந்த விடுதலைப் போராட்டத்துக்கு பல்வேறு காலகட்டங்களில் பல சோதனைகள் வந்த போதிலும் அது தளர்ந்து விடவில்லை. இந்த வகையில் மக்களைக் குழப்பி அவர்களுக்கும், விடுதலைப் போராட்டத்துக்குமான தொப்புள்கொடி உறவை யாராவது அந்நியப்படுத்தலாம் அல்லது சிதைக்கலாம் எனக் கனவு கண்டால் அது அவர்களின் பகற்கனவாகவே முடியும் என்பது திண்ணம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

**லோஜினி**

---

உலக ஊனமுற்றோர் நாள் – டிசம்பர் 03

– சந்துரு

# வலுக்குறைந்தோருக்கு வலுவூட்டி நிற்போம்



(நேற்றைய தொடர்ச்சி)

– உலகம் முழுவதும் பரந்து கிடக்கும் எங்கள் உறவுகளிடம் இன, நிற, மொழி வேறுபாடு என்பதோ, உயர்வு, தாழ்வு என்பதோ சாதிமத வேறுபாடு என்பதோ, எதுவும் கிடையாது. ஒரே குலம், ஒரே மொழி என நாம் சண்டைகள் இன்றி சந்தோஷமாக வாழ்கின்றோம். ஆனால் எங்களைக் கைநீட்டி, ஊனமுற்றோர் எனச் சுட்டிக்காட்டி, ஒதுக்கி வைக்கும் நீங்களோ, பல்வேறு வடிவங்களில் வேறுபட்டு நின்று கொண்டு, அமைதி இழந்து அவலப்படுகிறீர்களே எனத் தனது மன உணர்வுகளை எழுத்தில் கொட்டிய செவிப்புலனிழந்தோர் சங்கத் தலைவர் க.சுரேந்திரநாதனுக்குப் பதில் கூற வகையற்று கூசி நிற்கும் நிலை எனக்குரியது மட்டுமல்ல என்பதில் நான் சற்று ஆறுதல் அடையமுடிந்தது.



"எமது சங்கம் யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களிலும் இயங்கி வருகிறது. எமது சங்கத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என செவிப்புலன் வலுக்குறைந்த அனைவருமே அங்கத்தவர்களாக இணைந்து கொள்கின்றார்கள். யாழ்மாவட்டத்தைப் பொறுத்தவரை எமது அங்கத்தவர்களது வாழ்வு மேம்பாட்டுக்காக, சுயதொழில் கடன் திட்டத்துக்கென 3,20,000 ரூபாவுக்கு மேல் செலவிட்டுள்ளோம். எமது சங்க நிதித் தேவைக்காக, சங்கத்தாலேயே கோழிவளர்ப்பு, ஆடுவளர்ப்பு, வாழைத்தோட்டச் செய்கை போன்றவற்றிலும் ஈடுபட்டு வருகின்றோம்.

ஒருசில அன்பர்கள் எமக்கு உதவுகின்றார்கள். இந்த நிதி உதவியைக் கொண்டு எமது சங்கத்தை ஓரளவு வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றோம் எனக் கூறும் சுரேந்திரநாதன், செவிப்புலன் வலுக்குறைந்த பலர் கிராமங்களில் இன்னும் தமது சங்கத் தொடர்பின்றி இருப்பதாகவும், பெற்றோரது கல்வி அறிவின்மை, குடும்ப கௌரவம் மற்றும் பெண் பிள்ளைகளது போக்குவரத்துக்களிலான பாதுகாப்புக்கள் என்பன காரணமாக அவ்வாறானவர்கள் வீடுகளிலேயே முடக்கப்பட்டு விடுவதாகவும், இவ்வாறு முடககப்படுவதால் அவர்களது உடல், உள ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுவதோடு, அவர்களும் தாழ்வுணர்ச்சிக்கு உட்பட்டு வேதனைகளோடே வாழ்ந்து மடிவதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வாறானவர்களது சிலுவைகளைச் சுமக்க மீண்டும் ஒரு தடவை யேசு பிரான் தான் வந்து பிறக்க வேண்டுமா? எமது மனங்களில் மனிதம் செதது விடடதா? என்று எனது மனதில் எழுந்த ஆதங்கத்துக்கு சிகரம் வைத்ததுபோல் ஒரு இளைஞரை அறிமுகப்படுத்தினார், இந்தச் சங்கத்தினது பகுதிநேர ஆசிரியை ஒருவர். அந்த இளைஞனுக்கு இருபத்திமூன்று வயதிருக்கலாம். இரண்டு கைகளதும் முழங்கைக்கு கீழ் இல்லாதிருந்த அந்த இளைஞருக்கு செவிப்புலன் மட்டுமே பிறப்பில் இருந்து வலுக்குறைந்திருந்ததாம். தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த அந்த இளைஞரைப் போர் நடவடிக்கை ஒன்றின் போது அவரைக் கைது செய்து, விசாரித்தவர்கள், இவர் மௌனமாக இருந்தவரைப் பார்த்து, தம்மை அவமரியாதை செய்வதாக நினைத்துப் போலும் இவரது இரு கைகளையும் முழங்கைக்கு சற்றுக் கீழே துண்டாடி விட்டார்கள். இந்தத் தகவலைக் கேட்டதும் கண்கலங்க மட்டுமே என்னால் முடிந்தது. எனது கண்கள் கலங்குவதை மறைத்துக் கொள்வதற்காகக் கீழே குனிந்து நான் கால்களைத் தடவ, இதுவரை எங்கள் முகங்களையே பார்த்துக் கொண்டிருந்த அந்த இளைஞர், எனக்கு நுளம்பு கடிப்பதாக நினைத்து, தனது இரு ஜெய்ப்பூர் கைகளாலும் இடுக்கிப் பிடித்து மின்சாரக் காற்றாடியின் ஆளியினைப் போடும் முயற்சியில் ஈடுபடுகின்றார். அவரது மனித நேயம் எனது மண்டையில் ஓங்கிக் குத்துவது போல் ஒரு வலியைத்தர நான் நெளிந்து கொள்கின்றேன்.

இந்த வலுக்குறைந்தோர் தினத்தில் எமது பத்திரிகையூடாக ஏதாவது முன்வைக்க விரும்புகிறீர்களா? அப்படியாயின் எழுதித்தாருங்களேன் என நான் கேட்க, "உங்கள் வீடுகளில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு நாங்கள் ஆகாதவர்கள் என ஒதுக்கி வைக்கும் நீங்கள் எங்கள் உணர்வுகளை எப்படி மதிப்பீர்கள்? எனக் குறிப்பிட்டபடி, ஐயா! எங்களால் வாகனம் ஓட்ட முடியும். துவிச்சக்கர வண்டி செலுத்த முடியும், நடந்து போய்க் கருமமாற்ற முடியும். இருப்பினும் நாங்கள் ஒட்டிச் செல்லும் வாகனங்களை மற்றைய வாகங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்ட ஏதாவது பொதுக் குறியீடு ஒன்றை அறிமுகப்படுத்தித் தாருங்களேன். அதனூடாக நாம் செவிப்புலன் வலுக்குறைந்தவர்கள் என்பதை மற்றையவர்கள் புரிந்து கொள்வார்களாயின் எமக்கு ஏற்படும் ஆபத்துக்கள், தொல்லைகளை நாம் பெரிதும் குறைத்துக் கொள்ள முடியுமல்லவா? எனக் கேட்டார். நியாமானது தானே. ஆர்வமும் வசதியும் மிக்க அன்பு இதயங்களே! வழிகாட்டுங்களேன்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை பிறப்பின் போதும் மற்றும் இளம்பிள்ளை வாதம் போன்றவற்றால், கால்கை வலுக்குறைந்தவர்களது எண்ணிக்கையைக் காட்டிலும், 1996களின் பின்னர் போரால் இவ்வகையான வலுக்குறைவுக்கு உட்பட்டவர்களது தொகை மிகமிக அதிகமானதாகவே உள்ளது. 1996 முதல் 2003 வரையிலான காலப் பகுதிக்குள் மட்டும் மதிவெடி மற்றும் பிற வெடிப் பொருட்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை யாழ்.மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 450 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 1996 களில் 33 ஆகவும். 1997 இல் 132 ஆகவும், 1998இல் 38 ஆகவும், 1999 இல் 33 ஆகவும் இருந்து, 2000ஆம் ஆண்டு 45 ஆகவும், 2001 ஆம் ஆண்டு 87 ஆகவும் உயர்ந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வலுக்குறைவடைந்தவர்களது வாழ்வு மேம்பாட்டுக்காக இயங்கிவருவதே ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கமாகும். 1990 களில் உருவாக்கப்பட்ட இந்த நிறுவன அமைப்பு இயற்கையாகவோ அன்றி செயற்கையாகவோ இவ்வகை வலுக்குறைந்தவர்களது மேம்பாட்டுக்காக பயிற்சி வகுப்புக்கள் மற்றும் கல்வி உதவித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொருத்தமான சுயதொழில் முயற்சிப் பயிற்சிகளை வழங்கி, கடன் தொகையையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

நோய், விபத்துப் போன்ற காரணிகளால் எமது அவயவங்களை இழக்கும் நாங்களும் உங்களைப் போன்ற உணர்ச்சிகள் குவிந்த உள்ளத்தைக் கொண்டவர்கள் தானே? உடல் அவயவ இழப்பைக் காரணமாகக் காட்டி எமது உள்ளத்தை உணர்ச்சிகளை மிதிக்கலாமா? நீங்கள் கூறும் ஊனம் என்பது எமது உடல் அவயவத்துக்கு மட்டுமே அன்றி, உள்ளத்துக்கு அல்ல. உங்களது அனுதாபம் எங்களுக்குத் தேவையில்லை. பரிதாபத்தோடு எங் களைப் பார்க்காதீர்கள், எமக்குள் உள்ள திறமைகளை அறிந்து - உணர்ந்து உரிய மதிப்பைத் தாருங்கள், அதுபோதும் எமக்கு. நாங்களும் மனிதர்களே எனத் தனது மனப் பாரத்தை என் முன்வைத்தார், இந்தச் சங்க அங்கத்தவர்களுள் ஒருவரான ஆர்.செந்தூரன். இவர் ஒரு மிகச் சிறந்த மோட்டார் சைக்கிள் திருத்துநர் என அவரது திறமையை வெளிப்படுத்தினார் இந்தச்சங்க சேவையாளர் ஒருவர்.

வலுக்குறைவு என்பது சாபம் அல்ல; தண்டனை அல்ல; அது ஒரு விபத்து. எமது தாயகப்பகுதியைச் சூழ்ந்து நிற்கும் போர் அரக்கர்களால் தோட்டங்களிலும். வீதிகளிலும், கடற்கரை ஓரங்களிலும் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளால் நாளை ஆயிரக்கணக்கானவர்கள் இன்னும் வலுக்குறைந்தோர் ஆக்கப்படலாம். அதில் நானும் நீங்களும் கூட அடக்கப்படலாம். இங்கே நான் கூறிய ஏதாவது ஒரு சங்கத்தில் நாங்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள வேண்டி ஏற்படலாம். அதற்காகவாவது இன்று இவர்களைப் போஷிப்போம். அரவணைப்போம். ஆறுதல் செய்வோம். உடனிருப்போம். ஒத்துணர்வு வழங்குவோம்.

## 225 மில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்த டைனோசர் படிமங்கள் பிரேஸிலில் கண்டுபிடிப்பு!



225 மில்லியன் வருடங்களுககு முன்னர் வாழ்ந்த புதிய இன டைனோசர் ஒன்றின் படிமங்களைக் கண்டுபிடித்துள்ளதாக பிரேசில் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட டைனோசரின் படிமங்களை பிரேசிலின் ஒதுக்குப்புறம் ஒன்றில் வாழ்ந்த வயோதிபர் ஒருவர் நடந்துசெல்கையில் கண்டுள்ளார்.

இதனால், ரொலின் ரனோ என்கின்ற குறிப்பிட்ட வயோதிபருக்கு கௌரவமளிக்கும் வகையில் இந்த டைனோசருக்கு யுனைசரஸ் ரொலின்ரனோய் என விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட டைனோசா தாவரங்களை உணவாக உட்கொண்டதாகவும் 2.5 மீற்றர் நீளத்தினை உடையதாகவும் தெரிவித்துள்ள றியோடி ஜனோறியோப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக்குழுவினர், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பழைமை வாய்ந்த டைனோசர் இனங்களில் இதுவும் ஒன்றாகும் எனத் தெரிவித்தனர்.

இவ்வகை டைனோசர்கள் ஐரோப்பாவிலும் தென்னாபிரிக்காவிலும் வாழ்ந்துள்ளதாகவும் இது அண்மையில் ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட ஐரோப்பிய பினேற்றோசோரஸ் குடும்பத்தினைச் சேர்ந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## காஷ்மீர் பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் நேற்று தாக்குதல்!

### ஆறு பொலிஸார் உயிரிழப்பு



இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீர் சோபொல் நகரத்திலுள்ள றிசேவ் பொலிஸ் படைமுகாம் மீது காஷ்மீர் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 5 றிசேவ் பொலிஸார் கொல்லப் பட்டனர்.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் தீவிரவாதி ஒருவரும் கொல்லப்பட்டார்.



நேற்று நள்ளிரவு வேளை பாகிஸ்தான் எல்லையூடாக காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவிய தீவரவாதிகள் இருவர் - மத்திய றிசேவ் பொலிஸ் படைமுகாமுக்குள் பதுங்கியிருந்தனர்.

இவ்வாறு பதுங்கியிருந்த இருவரும் அதிகாலைப் பொழுதில் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்டவேளை தீவிரவாதிகள் முகாமின் எப்பகுதியினுள் மறைந்துள்ளனர் என்பதை அறிந்திராத பொலிஸார் பதற்றத்திற்குள்ளாகினர்.

இதனையடுத்து இந்திய இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலின்போது தீவிரவாதிகளில் ஒருவர் கொல்லபட்ட அதேசமயம் மற்றைய தீவிரவாதி தப்பியோடிவிட்டார்.

தீவிரவாதிகள் கைக்குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்ட அதேசமயம் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் இதன்போது 5 பொலிஸார் கொல்லப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்குமிடையே இரண்டாவது புகையிரதசேவை ஆரம்பிப்பது தொடர்பாக பேச்சுக்கள் இடம்பெற்றுக்கொண்டிருத சமயம் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் கலந்துரையாடுகிறார்.

## அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புச் செயலராக பேர்னாட் கேறிக் நியமனம்!



அமெரிக்காவின் நியூயோர்க் நகர முன்னாள பொலிஸ் ஆணையாளர் பேர்னாட் கேறிக் அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலராக அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலராக இருந்த ரொம் றிஜ்ஜிக்குப் பதிலாகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1986 ஆம் ஆண்டு ஒரு அலுவலராக படைப் பிரிவில் இணைந்தபோதும், 2000 ஆம் ஆண்டு பொலிஸ் ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்ற இவர், 2001 ஆம் ஆண்டு நிறைவில் பதவியிலிருந்து விலகினார்.

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் கடந்த வருடம் ஈராக் சென்ற பேர்னாட் அங்கு ஈராக் பொலிஸ் பிரிவைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்காற்றினார்.

அதிபர் புஷ் தனது இரண்டாவது பதவிக் காலத்தில் தனது நிர்வாகத்தை மாற்றியமைத்துவரும் நிலையில் அமெரிக்காவிற்கான, ஐ.நா.தூதுவராக பணியாற்றிய ஜோன் மன்பேர்த் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இந்தப் பதவியிலிருந்த ஜோன் றெக்றோபொன்ரி கடந்த ஜுலை மாதம் ஈராக்குக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டதை அடுத்து டன்போர்த் இந்தப் பதவிக்கு அமர்த்தப்பட்டார். இவரின் இந்தப் பதவி விலகல் அனைவருக்கும் ஆச்சரியமளிப்பதாக இருந்ததென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்ததாக ரொய்ட்டர் தெரிவித்தது.

அதிபர் புஷ் தனது இரண்டாவது பதவிக் காலத்தில் இராஜாங்கச் செயலர் கொலின் பவலின் பதவி விலகலை அடுத்து இவரையே அப்பதவிக்கு நியமிப்பார் என செய்திகள் தெரிவித்தபோதும் அப்பதவிக்கு அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் கொண்டோ லீசாவை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக் தலைநகரில் இரு தாக்குதல்கள்; 16 பொலிஸார் உட்பட முப்பது பேர் பலி



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற இருவேறு தாக்குதல்களில் 16 பொலிஸார் உட்பட குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன.

முதலாவது தாக்குதல் பாக்தாத்தின் வட பகுதியான அட்காமியில் இடம்பெற்றது. இங்கு நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 14 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 19 பேர் காயமடைந்தனர்.

இந்தக் கார்க்குண்டுத் தாக்குதலின் இலக்கு எதுவென தெளிவாகத் தெரியவரவில்லையெனச் செய்திகள் தெரிவிக்கின்றபோதும், இது அப்பகுதியில் இருந்த பொலிஸ நிலையத்தின் மீது அல்லது ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட முயன்றிருக்கலாமெனவும் இது தவறுதலாக இடையில் வெடித்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் நடைபெற்று சிறிதுநேரத்துக்குள் தென்மேற்கு நகரமான அல் - உமல் நகரத்திலுள்ள பொலிஸ் நிலையம் மீது கிளர்ச்சிவாதிகள் தாக்குதலை நடத்தி அங்குள்ள பொலிஸாரைக் கொன்றபின்னர் சிறைக்கைதிகளையும் மீட்டதுடன் ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் 16 பொலிஸார் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.



அத்துடன் இங்கிருந்த 51 சிறைக் கைதிகளும் கிளர்ச்சிவாதிகளால் மீட்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலை தாமே நடத்தியதாக அபு முசாப் அல் சர்காவி தலைமையிலான இஸ்லாமிய கிளர்ச்சிவாத அமைப்பு இணையத்தளம் மூலம் உரிமை கோரியுள்ளது.

## 71 அமெரிக்கப் படையினர் பலூஜா போரில் உயிரிழப்பு!

(பாக்தாத்)

ஈராக்கில் கிளர்ச்சிவாதிகளின் பிடியில் சிக்கியிருந்த பலூஜா நகரை அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தி மீட்டது.

இந்த யுத்தத்தில் அமெரிக்க படைத் தரப்பில் 71 பேர் வரை பலியானதாக அமெரிக்க இராணுவத்தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் மட்டும் மொத்தம் 134 இராணுவ வீரர்கள் ஈராக்கில் பலியாகி உள்ளனர். 20 மாதமாக நடந்துவரும் யுத்தத்தில் கடந்த ஏப்ரல் மாதம்தான் அதிக அளவில் அமெரிக்க வீரர்கள் பலியானார்கள். அதற்கு அடுத்த படியாக நவம்பர் மாதத்தில் அதிகளவு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

ஈராக் போரில் அமெரிக்க இராணுவத் தரப்பில் இதுவரை 1200 முதல் 1600 பேர் வரை பலியாகியுள்ளனர் என அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.




## கொங்கோவுக்கு அத்துமீறிப் படையனுப்பிய றுவாண்டாவின் செயல் குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபை ஆராய்வு



கொங்கோவின் கிழக்குப் பகுதியில் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திய றுவாண்டா படையினரின் நடவடிக்கைகள் குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபை ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

றுவாண்டா துருப்பினர் கொங்கோவிற்குச் சென்றது தொடர்பான அறிகுறிகள் தென்படுவதாக ஐ.நா.அமைதிப்படையின் தலைவரான ஜீன் - மேரி குச்சனோ தெரிவித்தார். ஆனாலும் இது தொடர்பாக உறுதியான தகவல் எதுவும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் தமது படைகள் எல்லையைக் கடந்து கொங்கோவிற்குச் செல்லவில்லை என றுவாண்டா ஜனாதிபதி போல் காகமே மறுத்துள்ளார்.

ஆனாலும், 100 படையினரை தாம் கொங்கோவிற்குள் கண்டதாகவும் அவர்கள் றுவாண்டா படையினராக இருக்கவேண்டுமென தாம் நம்புவதாகவும் ஐ.நா.அமைதிப்படையினர் தெரிவித்தனர்.

றுவாண்டாவின் 6000 துருப்பினர் தமது நாட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து கிராமவாசிகளைத் தாக்கியுள்ளதாக கொங்கோ அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.



ஆனாலும், கொங்கோவில் றுவாண்டாப் படையினர் நின்றதற்கான தெளிவான தகவலை எவரும் தெரிவிக்கவில்லை என ஐ.நா.வுக்கான அல்ஜீரிய தூதுவர் அப்தல்லாபாலி இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் தெரிவித்தார்.

றுவாண்டாவின் இந்த நடவடிக்கைக்கு எதிராக கண்டனம் தெரிவித்து அதன் மீது பொருளாதாரத்தடை விதிக்கவேண்டுமெனவும் கொங்கோ ஐ.நா.பாதுகாப்புச் சபையை கேட்டுள்ளது.

ஆனாலும், எந்தவொரு றுவாண்டா துருப்பினரும் எல்லை கடந்து கொங்கோவிற்கு செல்லவில்லையென றுவாண்டா ஜனாதிபதியின் ஆலோசகரான றிச்சட் சிசிபேரா தெரிவித்தார். அத்துடன் ஜனநாயக குடியரசான கொங்கோவிற்குள் றுவாண்டா படைகள் சென்றதென்பது ஒருவதந்தி எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை தமது துருப்பினரில் 6000 பேரை அடுத்த இரண்டு வாரத்திற்குள் எல்லைப் பகுதியில் நிறுத்தப்போவதாக கொங்கோ அறிவித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கடுகதி பஸ் - கன்ரர் மோதல்

# எட்டு பயணிகள் படுகாயம்!




(யாழ்ப்பாணம்)

முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கடுகதி மினிபஸ் கன்ரருடன் மோதி விபத்துக்குள்ளாகியதால் அதில் பயணம் செய்த எட்டுப்பேர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று மாலை 2.30 மணிக்கு சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலையத்திற்கு சமீபமாக இந்த விபத்து இடம்பெற்றது.

முகமாலையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கடுகதி மினிபஸ், சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த கன்ரருடன் நேர்எதிரே மோதியது.

இந்த விபத்தில் கொழும்பிலிருந்து வந்த பயணிகள் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர் கடுகதிமினி பஸ், கன்ரர் ஆகியவற்றின் முன்பக்கம் படுமோசமாக சேதமடைந்தன.

காயமடைந்த எட்டுப்பேரும் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதுடன் சேதமடைந்த இரு வாகனங்களையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர்.

இந்தக் கோரவிபத்தின் போது யாழப்பாணம் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த கு.சிவதீபன் (வயது- 24) ஆனைக்கோட்டை நான்காம் கட்டையைச்சேர்ந்த கதிரவேலு சிவனேசன் (வயது-21) சங்கானை தொட்டிலடியைச் சேர்ந்த சு.சிவதாஸ் (வயது 44)

அளவெட்டி காலை நகரைச் சேர்ந்த பு.தேவஞானம் (வயது 35) யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதியைச் சேர்ந்த ச.நிஷாந்தன்(வயது 15) மட்டுவில் தெற்கைச் சேர்ந்த நாகலிங்கம் தயாளினி (வயது 12) சாவக்ச்சேரி கச்சாய் வீதியைச்சேர்ந்த செ.செல்வசீலன் (வயது 27), சுவிஸ்நாட்டைச் சேர்ந்த மில்லர் ஈமிற் (வயது 30) ஆகியோரும் படுகாயமடைந்தனர். (29)

# குருநகரில் காயமுற்றவர் நேற்று மரணமானார்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. யாழ். 3 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கமில்ரன் (வயது 26) என்பவரே மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது -

கடந்த 28 ஆம் திகதி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் இவர் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தபோது, சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமடைந்தார்.

இவரின் உடல் வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# ஐ.நா.செலாளர் பதவிக்கு ஜயந்த தனபால போட்டி!

அடுத்த வருடம் நடைபெறவுள்ள - ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்காக - சமாதானச் செயலகப்பணிப்பாளராக இருக்கும் ஜயந்த தனபாலவின் பெயரை அரசாங்கம் முன் மொழியவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்றபோது - அதற்கு பதிலளித்து உரைநிகழ்த்திய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தத் தகவலைவெளியிட்டார். அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்.

அடுத்த வருடம் ஐ.நா. செயலாளர் நாயகம் பதவி ஆசிய நாட்டவர் ஒருவருக்கு வழங்கப்படவிருக்கின்றது.

இதன் காரணமாகவே ஜயந்த தனபாலவின் பெயரை முன்மொழிவதற்கும் அதற்கான ஆதரவை ஏனைய நாடுகளிடமிருந்து திரட்டுவதற்கும்அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இந்த அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு குறித்து வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் கோரிக்கையை அடுத்தே இது வாக்களிப்புக்கு விடப்பட்டது.

ஐ.தே.க. இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத போதிலும் அந்தக் கட்சியின் தீர்மானத்தை மீறி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸவரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து நிதிஒதுக்கீடுகளுக்கு எதிராக வாக்களித்தார்.

மலையக மக்கள் முன்னனி நாடாளுமன்ற உறுப்பினர் பீ.இராதாகிருஸ்ணனும் எதிர்த்து வாக்களித்தார்.

இருப்பினும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இ.தொ.கா., ஜாதிக ஹெல உறுமய, சிறிலங்கா மு.கா மாற்றுக் குழு ஆதரவாக வாக்களித் ததையடுத்து நிறைவேற்றப்பட்டது.

## வட - கிழக்கு ஆளுநராக டிரோன் பெர்ணான்டோ நியமனம்

வடக்கு - கிழக்கு மாகாணசபை, யின் புதிய ஆளுநராக முன்னாள் வெளிவிகவார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ நியமிக்கப்படவுள்ளார். எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் இவரது நியமனம் நடைமுறைக்கு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவர் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம செய்யவுள்ளார் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக நீண்டகாலம் பதவி வகித்த மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாராக நியமிக்கப்பட்டதை அடுத்து அந்த வெற்றிடத்திற்கு டிரோன் பெர்ணான்டோ நியமிக்கப்படவுள்ளார். இவர் லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## கட்சி உத்தரவையும் மீறி

# நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக மகேஸ்வரன் வாக்களிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொறடா உத்தரவை மீறி - அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு வாக்களிப்பின்போது அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தார்.

எதிர்க்கட்சிக் கொறடா மகிந்த சமரசிங்க - வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான வாக்கெடுப்பின்போது, தமது கட்சி உறுப்பினர்களை வாக்களிக்க வேண்டாம் என்று அறிவித்திருந்தார்.

இந்தக் "கொறடா உத்தரவை தனது ஏனைய ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத அதேவேளை, முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் மட்டும் வாக்களித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து இவர் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெளிநாட்டு அமைச்சு - தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுவதாலேயே தாம் நாடாளுமன்றத்தில் வெளிநாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் தமிழராக இருக்கின்றபோதிலும், அவர் வெளிநாட்டு அமைச்சராக இருந்து கொண்டு தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றார்.

எனவே, தான் தமது கட்சியை விட எமது மக்களை மேலாக மதிப்பதால் வாக்கெடுப்பில் எதிராக வாக்களித்தாக மகேஸ்வரன் மேலும தெரிவித்தார்.

## பலாலிநோக்கி...

குண்டு செயலிழக்கும் பிரிவு விரைந்துசென்று விமானத்தை சல்லடை போட்டுத் தேடிய போதும் அதனுள் இருந்து எந்த வெடிபொருளும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதையடுத்து இரத்மலானையிலிருந்து நேற்றுக்காலை 10.30 மணியளவிலேயே விமானம் பலாலி நோக்கிப் புறப்பட்டது.

## போலிச் சாமியார்..

கள் கிடைத்ததையடுத்து, கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரண்டு பெண் பொலிஸார் பூஜை செய்வ தற்காக மாறு வேடத்தில் சென்ற போது அவர்களிடம் போலிச் சாமியார் தவறாக நடக்க முற்பட்டுள்ளார். இதன்போது அவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

கொழும்பு நகரிலுள்ள உல்லாச விடுதியொன்றில் தங்கியிருந்து, பெண்களை ஏமாற்றி பூஜைகளை நடத்திவந்த இந்தப் போலிச் சாமியாருடன், அவரது உதவியாளர்களான இருவரும் கைது செய்யப்பட்டனர்.

aat & CAT
June 2005 பரீட்சைக்குரிய விரிவுரைகள் 12.12.2004
காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விரிவுரைகள்
English Medium இல் மட்டும் நடைபெறும்.
பரீட்சைக்கு உரிய முறையில்
Special English Lectures நடாத்தப்படும்.
Office Time:- Sat. & Sun - 9.00 a.m. - 3.00 p.m
CAREER.COM INSTITUTE
NO.79, MAIN STREET,
JAFFNA.

UNIT
உலக முன்னணி நிறுவனங்களான COMPAQ, DELL, IBM INTEL, PERX மற்றும் ASROCK நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் உலகத்தரம் வாய்ந்த கணனிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் கொழும்பு விலைக்கே யாழில் கிடைக்கச் செய்து வழங்குகின்றோம்.
3 வருட முழு உத்தரவாதம்
விசேட சலுகைப் பொதிகள்
அதிசயிக்கத்தக்க கொழும்பு விலையில்
புதிய Multimedia Pentium IV கணனிகள 39,500/= முதல்
மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
புதிய Multimedia Compaq Pentium III மற்றும் Pentium II கணனிகள் 13,000/= முதல்
ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
கல்வி நிலையங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் முகவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.
அதிசயிக்கத்தக்க சலுகைகள்
இச்சலுகைகள் ஒரு சில தினங்கள் மட்டுமே
எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்
சகல கணனி உதிரிப்பாகங்களும் அதிசயிக்கத்தக்க சலுகை விலையில்
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.
(சி/3434)

கலைவாணி கல்வி நிறுவனம்
மானிப்பாய் வீதி, கோப்பாய்.
புதிய கல்வி ஆண்டு 2005
தரம் 3 – O/L வரை
ஆரம்பம் 05.12.2004 ஞாயிறு காலை 8 மணிக்கு
(சி-3436) நிர்வாகி

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் சகாயநேசன்

(நெடுந்தீவு ப.நோ.கூ.சங்க ஊழியர்)

நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் சகாயநேசன் 2.12.2004 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், யூலியட் அனட்ராவின் அன்புக் கணவரும், திறிந்தி லோகராஜ், சஞ்சீத் குமார், தேவஜனோவா, சகாய தேவராஜ், வேர்ஜினி, பற்றிமா ஜெனட், நிதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4.12.2004 இன்று (சனிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நெடுந்தீவு மத்தி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் :
ஜோன்சன் கெனடி
(மைத்துனர்)

நெடுந்தீவு - 08 (இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# குருநகர், திருநகர் சம்பவங்களின் பின்னணியில்

# மாற்றுக் கட்சிகளும், பேரினவாதக் கட்சிகளும்!

## ரவிராஜ் எம்.பி குற்றச்சாட்டு



குருநகர் கோஷ்டி மோதல் சம்பவங்களுக்குப் பின்னால் மாற்றுக் கட்சியினரும், பேரினவாத, இனவாதக் கட்சியினரும் இருப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து அவசரமாக யாழ்ப்பாணம் திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சம்பந்தப்பட்ட மக்களுடனும், கத்தோலிக்க மதகுருமார், விடுதலைப் புலிகளின் கடற்புலிப் பிரிவினருடனும் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈ.பி.டி.பியினரும், பேரினவாத ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற சிங்களக் கட்சிகளின் கூட்டுச் சதியாகவே இந்த விடயம் கையாளப் பட்டிருக்கிறது.

இந்த விடயத்தில் தேவை இல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தி, மக்களைக் குழப்பத்துக்குள் தள்ளி, தொங்கு பொறியில் உள்ள சமாதான நடவடிக்கைகளை மேலும் குழப்ப இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு அரச ஊடகத்துறையும் துணைபோவது சமாதான நடவடிக்கைகளில் அரசு ஈடுபாடு கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

தமிழ் மக்களுக்கு விரோதமான கருத்துக்களைப் பரப்பும் ஈ.பி.டி.பியினரின் விஷமப் பிரசாரங்களை அரச ஊடகங்கள் ஊடாக ஒலிபரப்புவது இவ்வாறான சம்பவங்களுக்கு முக்கிய காரணமாகிறது.

குருநகர், திருநகர் பிரச்சினைக்கும் இந்தச் சம்பவங்களே மூலகாரணமாகும். இதனை மக்கள் மத்தியிலும், சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் எடுத்துக்கூறவே தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் நான் இங்கு வந்துள்ளேன்.

நாடாளுமன்றில் எவ்வளவோ விவாதங்கள், வாக்கெடுப்புக்கள் இவற்றுக்கு மத்தியில், எனது இந்த விஜயம் முக்கியத்துவம் பெறக் காரணம் இந்தச் சம்பவத்தைப் பேரினவாதிகள் திரிபுபடுத்துவதைத் தடுப்பதற்கும் உண்மை நிலையை எடுத்துக் கூறுவதற்கேயாகும்.

எனவே இது ஒரு முக்கிய கால கட்டம். இந்தக் காலகட்டத்தில் அனைவரும் பொறுமை காப்பது அவசியம். எங்களது உள்ளகப் பிரச்சினைகளை பெரிதுபடுத்தாமல் தேசியத்துக்கான ஒற்றுமையை வலியுறுத்தி நிற்கவேண்டிய காலகட்டம் இது.

மாவீரர் நாள் நிகழச்சியைக் குழப்ப முயன்ற பேரினவாதிகளும், துரோகச் கும்பல்களும், அப்பாவி மக்களின் சிறுசிறு விவகாரங்களில் மூக்கை நுழைத்து, இயல்பு வாழ்வைச் சீரழிக்கும் திட்டமிட்ட செயல்களுக்கு நாம் பலியாகிவிடக்கூடாது.

இதனால் எமது உரிமைப் போராட்டம் திசை திருப்பப்பட்டு, கொச்சைப்படுத்தப்படும் சூழ்நிலையைத் தோற்றுவிக்கும். ஆகவே சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பினரும் பொறுமை காத்து, மூன்றாவது நபர்களின் முறையற்ற செயல்களுக்கு இடம் கொடுக்கவேண்டாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத்தெரிவும் நாளை காலை 10 மணிக்க லீக்கின் தலைவர் சு.புண்ணியசீலன் தலைமையில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளனும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, எல்லைப்படை மாவீரர்கள் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டிகள் சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளதால், லீக்கின் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் வலிகாமம் உதைபந்தாட்டக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரையும் தவறாது பங்குபற்றுமாறு வலிகாமம் லீக்கின் செயலாளர் மு.நடராஜன் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றாத விளையாட்டுக் கழகங்கள், உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்க முடியாதெனவும் அறிவிக்கப்படுகிறது. (101)

# நெடுந்தீவுப் பகுதியில் இலவச மருத்துவ முகாம்

குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டின்கீழ், அண்மையில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் இலவச மருத்துவமுகாமும், மருத்துவ ஆலோசனை வழங்கலும் இடம்பெற்றது.

நெடுந்தீவு மேற்குப் பகுதி மக்களுக்கும், நெடுந்தீவு மத்தி, கிழக்குப் பகுதி மக்களுக்கும் தனித்தனியாக இரண்டு தினங்கள் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமின் மூலம நெடுந்தீவில் உள்ள பலர் பயன் பெற்றதுடன், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மன, உடல் உபாதைகளுக்கு உட்பட்டவர்களும் இந்த மருத்துவ முகாமில் வரவழைக்கப்பட்டு, அவர்களது விபரங்களும் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# சமூகக்கல்வி பாடத்துக்கு பதிலாக புதிய பாடங்கள் அறிமுகம்!

அரசாங்கப் பாடசாலைகளில் தற்போது போதிக்கப்பட்டுவரும் சமூகக் கல்விப் பாடத்துக்குப் பதிலாக புவியியல், வரலாறு மற்றும் குடியியல் ஆகிய பாடங்களைப் புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று கல்வி அமைச்சின் செயலாளரால் சகல கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புக்களில் புவியியல், வரலாறு, குடியியல் ஆகிய பாடங்கள் அடுத்த ஆண்டு தொடக்கம் புதிதாக போதிக்கப்படவுள்ளன.

ஆண்டு 6 தொடக்கம் 7 வரை வகுப்புக்களில் 2005 ஆம் ஆண்டு தொடக்கமும், 8 ஆம் ஆண்டு தொடக்கம் 10 ஆண்டு வரை 2006 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தும், ஆண்டு 9 முதல் 11 ஆம் ஆண்டு வகுப்புக்களில் 2007 ஆம் ஆண்டு தொடக்கமும் புதிய பாடங்கள் போதிக்கப்படவுள்ளன. 2007 ஆம் ஆண்டு கல்வி தராதரப்பத்திர சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் முதற்தடவையாக புதிய பாடங்களில் பரீட்சை எழுதவுள்ளனர்.

## வடமராட்சி கிழக்கு பகுதியில்

# கால்நடை வைத்திய நிலையம் அமைத்துத் தருமாறு கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு, மருதங்கேணி உதவி அரசாங் அதிபர் பிரிவைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருதங்கேணிப் பகுதியில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றில் பெருமளவானோர் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு 'பட்டி' யாகப் பெருமளவு கால்நடைகளை வளர்ப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, இவற்றுக்கு நோய் வந்தால் கட்டுப்படுத்த முடியாமல் பெருமளவு கால்நடைகளை இழக்க நேரிடுகிறது.

இந்தப் பகுதியில் கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயம் இல்லாது, இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கால்நடைகளுக்கு நோய் ஏற்படும்போது கிளிநொச்சிக்கோ அல்லது சாவகச்சேரிக்கோ வீண் செலவுகளின் மத்தியில் செல்லவேண்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இந்தப் பகுதிக்கு கால்நடை வைத்திய அலுவலகம் ஒன்றை நிறுவி, கால்நடை வைத்திய அதிகாரியையும் நியமிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# வீதி புனரமைப்பு பணிகளுக்கு 300 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 'கார்ப்' எனப்படும் முரண்பாட்டுப் பிரதேச புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின்கீழ், இந்த மாகாணத்திலுள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கு 300 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் தெரிவித்தார்.

இதன்மூலம் இந்த மாகாணத்திலுள்ள 250 கிலோ மீற்றர் நீளமான வீதிகளும், அவற்றுக்குக் குறுக்காகப் போடப்பட்டுள்ள பாலங்கள், மதகுகள் என்பனவும் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்வகிக்கப்படாத மாகாண சபையின் நிர்வாகத்தால், பராமரிக்கப்படும் வீதித்திருத்த வேலைகளுக்கே இந்தப் பணம் செலவிடப்படும் என அவர் மேலும் தெரிவித்ததுடன் - அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். (17)

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் புற்றளை முன்பள்ளி நிலையம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - புற்றளை முன்பள்ளி, அடிப்படை வசதிகளற்ற பழைய கட்டடம் ஒன்றில் இயங்கிவருகிறது. புற்றளைப் பகுதியில் ஒதுக்குப் புறமாக உள்ள பழைய சுருட்டுத் தொழிலகம் ஒன்றின் கட்டடத்திலேயே இந்த முன்பள்ளி இயங்கி வருகிறது.

இதனை இந்தப் பகுதி சனசமூக நிலையமோ, அபிவிருத்திச் சங்கங்களோ கண்டும் காணாதபடி விட்டுள்ளன. இந்தப் பகுதியில் பல முன்பள்ளிச் சிறுவர்கள் கல்வி கற்கின்ற போதும், இவ்வாறான அடிப்படை வசதிகளற்ற முன்பள்ளியில் பிள்ளைகளுக்கு சிறந்த கற்பித்தல் மேற்கொள்ள முடியாதிருக்கிறது.

எனவே, கல்வியின் அடிப்படையான முன்பள்ளி கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக, இந்தப் பகுதி பொது அமைப்புக்கள் முன்பள்ளியை நல்லதொரு கட்டடத்தில் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (14)

# சின்னஞ்சிறு செய்திகள்

### கூத்தரங்கு சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் வெளியானது

செயற்திறன் அரங்க இயக்கத்தால் வெளியிடப்படும் கூத்தரங்கு சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் வெளிவந்துள்ளது.

நாடக ஆற்றுகை தொடர்பான செய்திகள், கட்டுரைகளுடன் நேர்காணல்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்த இந்தச் சஞ்சிகையில்-

சுவிற்ஸர்லாந்தில் தமிழ் அரங்கு பற்றி அன்ரன் பொன்ராஜ் உடனான நேர்காணல், இந்திய அரங்கு பற்றி பேராசிரியர் வீ.அரசுடனான நேர்காணல், ஐரோப்பாவில் வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்தென பல ஆக்கங்களைக் கொண்ட கூத்தரங்கு நாடக அரங்கச் செயற்பாடுகளை உள்ளடக்கி, இருமாத இதழாக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

### முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள்

வண்ணை - ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தால் நடத்தப்படுகின்ற, அறிவொளி பாலர் பாடசாலை மாணவர்களின் பிரிவுபசார நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் க. தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ளதாக முன்பள்ளி ஆசிரியர் சு. உஷானந்தி தெரிவித்துள்ளார். அத்துடன் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (91)

### தென்னை நாற்றுக்கள் அன்பளிப்பு

பருத்தித்துறைப் பிரதேச செலயகத்தில் - பருத்தித்துறை பிரதேச மக்களுக்கு, தென்னை மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் குடியிருப்பாளர்களுக்குத் தென்னை மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் 1000 மரக்கன்றுகள் ஒவ்வொன்றும் தலா 10 ரூபாப்படி, தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. (14)

### கர்ப்பிணித் தாய்மாருக்கு சத்துணவு

நெடுந்தீவுப் பிரதேசத்தில் வசிக்கின்ற கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் போன்றோருக்கு கடந்த 29, 30 ஆம் திகதிகளில் நெடுந்தீவு பிரதேச சபையால் சத்துணவு வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களில் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டுவரும் மாதா - சிசு பரிபாலனத் திட்டத்தின் கீழேயே இந்த சத்துணவு வழங்கல் நிகழ்வு நெடுந்தீவு பிரதேசசபையினரால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

### வெடிக்காத் நிலையில் ஷெல் மீட்பு

சாவகச்சேரி - இராமலிங்கம் வீதியில் குடிநீர் குழாய் அமைப்பதற்கு, வீதிக்கு அருகில் கால்வாய் தோண்டியபோது வெடிக்காத நிலையில் இருந்த ஷெல் ஒன்று மீட்கப்பட்டது.

இது குறித்து வெடிபொருள் அகற்றும் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே இந்த ஷெல் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (17)

### திருத்தப்படாத கொல்லங்கிராய் வீதி

சிறிமுருகானந்த வீதியிலிருந்து கொல்லங்கிராய் வரையான வீதி முற்றாகச் சேதமடைந்து, குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது.

நீண்டகாலமாக இந்த வீதி திருத்தப்படாமையால், போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகிறது.

தற்போது மழைகாலம் ஆகையால் வீதியில் மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (29)

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ச.ஜனுஜா
முகவரி : பளை

முதலாவது



பெயர் : சே.அபிவர்ணன்
முகவரி : உடுப்பிட்டி

இரண்டாவது அகவையில்



பெயர் : கா.தீபனா
முகவரி : புளியங்கூடல்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ............

முகவரி : ............

பிறந்த ஆண்டு: ............

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

............

பெற்றோர் ஒப்பம்

# புனரமைப்புப் பணிகள் இடம்பெறாத நிலையில் ஐயங்கன்குளம், புத்துவெட்டுவான் பிரதேசங்கள்

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐயங்கன்குளம், புத்துவெட்டுவான் பிரதேசங்கள் நீண்டகாலமாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் சிதைவடைந்து காணப்படுகின்றன.

இந்தப் பிரதேச வீதிகள், பெய்து வரும் கடும் மழைகாரணமாகக் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இதனால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. இந்தப் பிரதேசத்தில் 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பாதிப்படைந்துள்ளன.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் செல்கின்றனரே தவிர, வீதிப் புனரமைபபுப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

பேராங்கண்டல், கலிங்கு மருதங்குளம் பகுதிகளில் தொடர்ந்து வெள்ளம் பாய்வதால் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் மக்கள் சைக்கிளில் கூடப் பயணம் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

எனவே, இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஒதியமலை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களின் நினைவு நாள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒதியமலைப் பிரதேசத்தில் 32 அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட நினைவு நாள் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம 2 ஆம் திகதி இந்தக் கிராமத்தில் வைத்து இராணுவத்தினரால் 32 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையையடுத்து ஒதியமலை கிராமத்திலிருந்து மக்கள் முற்றாக இடம் பெயர்ந்தனர்.

1997 ஆம் ஆண்டு ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் ஒதியமலைக் கிராமத்தை இராணுவத்தினர் ஆக்கிரமித்தனர்.

1999 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் - 3 நடவடிக்கை மூலம் ஒதியமலைக் கிராமத்திலிருந்து இராணுவத்தினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்டெடுக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் இதுவரை 171 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

மீளக்குடியமர்ந்த மக்களால் இந்தப் பகுதியின் 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நடத்தப்பட்டது.

# நான்கு புதிய நூல்கள் கிளிநொச்சியில் வெளியீடு !

பேரிகை அமைப்பின் ஆதரவுடன் அறிவமுது பதிப்பகத்தின் நான்கு புதிய நூல்களின் அறிமுக விழா நேற்றுமுன்தினம் மாலை 4.00 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

பேரிகை அமைப்பின் தலைவர் வேளமாலிகிதன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் - தேசியக் கொடியை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைக்க, பொதுச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகமும் அவரது பாரியாரும் ஏற்றிவைத்தனர்.

பின்னர் கோபூரின் - மனக்கோலம் என்ற புத்தகத்திற்கான அணி முகவுரையை புதுவை அன்பனும், கப்டன் மலரவனின் - போர் உலா புத்தகத்திற்கான அணி முகவுரையை போராளி எழுத்தாளரான மலைமகளும், பரீஸ் பொலெவேஜினின் - உண்மை மனிதனின் கதை என்ற புத்தகத்திற்கான அணி முகவுரையை நவம் அறிவுக்கூட பொறுபபாளர் கலைக்கோனும் பண்டிதர் நாட்குறிப்பேடு - 2005 என்ற நூலுக்கான அணி முகவுரையை பரமநாதபிள்ளையும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையினை திருமாவளவன் நிகழ்த்தினார்.(108)

## காணி அனுமதிப் பத்திரம் வழங்கல்

அக்கராயன் - ஆரோக்கியபுரம் கிராமத்தில் இதுவரையில் காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்படாதவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

துணுக்காய் பிரதேச காணி அலுவலர், கிராம சேவையாளர் ஆகியோரால் இந்தக் காணிப் பதிவு மேற கொள்ளப்பட்டது.

இந்தப் பிரதேச மக்களுக்கான வயல் காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரம் இதுவரையில் வழங்கப்படாமல் உள்ளது. இந்தப் பதிவுகள் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ)

# பாண்டியன்குளம், துணுக்காய் பகுதியில் மக்கள் அடிப்படை வசதியின்றி அவதி!

பாண்டியன்குளம் - துணுக்காய் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழும மக்கள் எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் 5 ஆம் பகுதியில் 50 குடும்பங்களும், வடகாடு கதிரவன் குடியிருப்பில் 100 குடும்பங்களும், துணுக்காய் பிரதேச குமுதன் குடியிருப்பு, கிட்டுமாமா குடியிருப்பு, பழைய குடியிருப்பு, மங்கை குடியிருப்பு, துணுக்காய் குடியிருப்பு மக்களுடன், யாழ். குடாநாட்டில் வெவ்வேறு கிராமங்களில் இருந்தும் 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ள மக்களும் முகாம்களில் வசித்து வருகின்றனர்.

இவர்கள் கடும் மழை காரணமாக பெரும் அவலங்களையும் சந்தித்து வருகின்றனர்.



முதியோர் வாரத்தை முன்னிட்டு மூதாட்டி ஒருவருக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் கே.ரீ.ஜெயசீலன் அன்பளிப்புப் பொதி வழங்குவதைப் படத்தில் காணலாம். (21)




# சின்னஞ்சிறு செய்திகள்

## ஊதியம் வழங்கப்படவில்லை

உருத்திரபுரீஸ்வர நீவில் கிராம மக்களாலும், விவசாய அமைப்பாலும் 2004 ஆம் ஆண்டு தை மாதம் விநியோக வாய்க்கால் துப்புரவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதுவரையில் இந்த துப்புரவு வேலை செய்த மக்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்தும் மக்களே இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

## 9 மாத குழந்தை உயிரிழப்பு

துணுக்காய் - கல்விளான் பிரதேசத்தில் அண்மை நாட்களாகத் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக குளிரால் பாதிக்கப்பட்ட குழந்தை ஒன்று உயிரிழந்தது.

இந்தப் பிரதேசத்தில் பெய்த கடும் மழை காரணமாக 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இதில் கந்தையா செல்வகுமார் என்ற 9 மாதக் குழந்தையே கடும் குளிரால் பாதிக்கப்பட்டு பரிதாபகரமாக உயிரிழந்தது.

## வீதிப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி வேறிடத்துக்கு மாற்றம்

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி, வெற்றிலைக்கேணி பிரதேசத்தில் வீதிப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட 65 லட்சம் ரூபா நிதி வேறு இடத்தின் புனரமைப்புக்காக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

வீதிப் புனரமைப்புடன் தொடர்புடைய அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இந்த நிதி வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் பல வீதிகள் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்து செய்யமுடியாத வீதிகள்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோட்டைகட்டிய குளம் - அம்பலப்பெருமாள் வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த கடும் மழையால் கோட்டைகட்டிய குளம் பாடசாலைக்கு அருகாமையில் உள்ள குளங்களில் வெள்ளம் அளவுக்கதிகமாக பாய்வதால் பஸ்சேவை தடைப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

# வட்டக்கச்சி பிரதேசத்தில் நாய்களால் கடியுண்டவர்கள் தொகை அதிகரிப்பு

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் நாய்க் கடிக்குள்ளாவோரின் தொகை அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

நாய்க் கடிக்குள்ளாவோருக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த ஏ.ஆர்.வி, பென்சிலின் மருந்துகள் அதிகளவாகப் பயன்படுத்தப்படுவதாகவும் வட்டக்கச்சி வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு கடியுண்ட ஒருவர் விசர் நாயால் கடியுண்டவரா அல்லது வளர்ப்பு நாயால் கடியுண்டவரா எனத் தெரியாத நிலையில் சிகிச்சையளிக்க வேண்டியுள்ளதாகவும் - இதனால் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களை அழிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (09)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் ஆனைவிழுந்தான் பாடசாலை

ஆனைவிழுந்தான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையிலும், மிகவும் பின்தங்கிய நிலையிலும் இயங்கிவருகிறது.

இந்தப் பாடசாலையானது கடந்த 20 வருடங்களாக இந்தநிலையில் காணப்படுவதுடன், இந்தக் கிராமமும் மிகவும் வசதி குறைந்த நிலையிலேயே இருந்துவருகிறது.

200 வரையான குடும்பங்கள் வசித்து வரும் இக்கிராமத்திலுள்ள இந்தப் பாடசாலை தரம் 6 வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ளது. 95 மாணவர்கள் வரை கல்வி கற்று வருவதுடன், அதிபர் உட்பட ஒரு ஆசிரியர் மட்டும் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கு மலசலகூட வசதி, கட்டட வசதி என்பன வும் சேதமடைந்த நிலையிலுள்ளது. 2002 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின்கீழ் கிராமத்துக்கான பொதுக் கிண்று, பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டமையால் குடிநீர் தட்டுப்பாடு நீக்கப்பட்டது.

ஆயினும், பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு நிறைந்த உணவு சமைப்பதற்கு தற்காலிக கொட்டகைகள்கூட இங்கு இல்லை. இதைவிட தற்போது பெய்த மழை பெரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் செயறபாடு மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன், பாடசாலை தரமுயர்த்தப்படாமல் உள்ளதால் பாடசாலை கல்வித்தரம் குறைந்துள்ளது.

வேறு பாடசாலை சென்று கல்வி கற்கமுடியாமல் கூடுதலான அளவு மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

இந்தக் கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவாக இருப்பதாலேயே அதிகளவு மாணவர்கள் இடைவிலகுகின்றனர். (ஶ்ரீ)

# மோட்டார் வாகனங்களின் பதிவு 11 ஆம் திகதி முதல் ஆரம்பம்!

மோட்டார் வாகன பதிவுப் பிரிவினரால் இதுவரை தமிழீழப் பதிவு மேற்கொள்ளாதவர்களுக்கு பதிவை மேற்கொண்டு 2005ஆம் ஆண்டுக்கான வரி அட்டை வழங்கப்படவுள்ளது.

இந்தச் செயற்பாடானது போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் கீழ்க் குறிப்பிடப்படும் தினங்களில் மட்டும் நடைபெறும். பதிவு மேற்கொள்ளும் இடங்களாவன -

இந்த மாதம் 11 ஆம் திகதி முல்லைத்தீவிலும், 12 ஆம் திகதி முள்ளியவளையிலும், 13 ஆம் திகதி நெடுங்கேணியிலும், 14 ஆம் திகதி கனகராயன் குளத்திலும், 15 ஆம் திகதி முழங்காவிலிலும், 16 ஆம் திகதி விடத்தல்தீவிலும், 20 ஆம் திகதி மடுவிலும், 22 ஆம் திகதி மருதங்கேணியிலும், 23 ஆம் திகதி பளையிலும், 27 ஆம் திகதி பூநகரியிலும் நடைபெறும்.

வாகன உரிமையாளர்கள் வாகனங்களைப் பதிவுசெய்ய வரும்போது படம் (கறுப்பு - வெள்ளை), குடும்ப அட்டை, ஆயப்பகுதி தீர்வைச்சான்று நிழற்பிரதியுடன், சிறிலங்கா ஆவணங்கள் அனைத்தும் நிழற்பிரதியுடன், பிணையாளி மற்றும் அவரது குடும்ப அட்டை ஆகியவற்றைக் கொண்டுவரவேண்டும் என தமிழீழ மோட்டார் வாகன பதிவுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.



வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் - பாண்ட் வாத்தியத்துடன் மாவீரர் பெற்றோர்கள் அழைத்துவரப்படுவதையும், காவல்துறை உறுப்பினர் சுபத்திரா மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

படங்கள் - வே.சீலன்